**சர்க்கரை விலை தொடர்ந்து உயர்வு; பருப்பு விலை குறைகிறது**

First Published : 12 Jan 2010 12:47:20 AM IST
Last Updated : 12 Jan 2010 02:27:05 AM IST

சென்னை, ஜன. 11: சர்க்கரை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அதேவேளையில் பருப்பு வகைகளின் விலை குறைந்து வருகிறது.

கடந்த வாரம் ஒரு மூட்டை (100 கிலோ) ரூ. 3,800}க்கு விற்கப்பட்ட சர்க்கரை செவ்வாய்கிழமை ரூ. 4,040}ஆக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ சர்க்கரை ரூ. 44}க்கு விற்கப்படுகிறது.

இந்திய அளவில் கரும்பு விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் சர்க்கரை உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

இதனால் சர்க்கரை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

மகாராஷ்டிரத்தில் இருந்து துவரம் பருப்பு வரத்து அதிகரித்துள்ளது. இதனால் வெளிநாட்டு துவரைகளும் விலை சரிந்துள்ளது.

துவரம் பருப்பு மூட்டை (100 கிலோ) கடந்த வாரம் ரூ. 8,000}க்கு விற்கப்பட்டது. இப்போது ரூ. 7,500}ஆக குறைந்துள்ளது. ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ. 80}க்கு விற்கப்படுகிறது.

தான்சானியா துவரம் பருப்பு ரூ. 7,100}லிருந்து ரூ. 6,700}ஆகவும், மியான்மர் துவரம் பருப்பு ரூ. 6,400}லிருந்து ரூ. 6,000}ஆகவும், துருக்கி துவரம் பருப்பு ரூ. 4,800}லிருந்து ரூ. 4,500}ஆகவும் குறைந்துள்ளது. இவைகள் ஒரு கிலோ முறையே

ரூ. 70, ரூ. 65, ரூ. 50}க்கு விற்கப்படுகிறது.

உளுந்து விலையும் குறைவு... உளுத்தம் பருப்பு ஒரு மூட்டை ரூ. 7,200}ல் இருந்து ரூ. 7,000}ஆகவும், மியான்மர் உளுத்தம் பருப்பு ரூ. 6,800}ல் இருந்து ரூ. 6,600}ஆகவும், பாசிப் பருப்பு ரூ. 8,300}லிருந்து ரூ. 8,000}ஆகவும், பர்மா, சீனா வகை பாசிப் பருப்பு ரூ. 7,800}லிருந்து ரூ. 7,500}ஆகவும் குறைந்துள்ளது.

இவைகள் முறையே ஒரு கிலோ ரூ. 73, ரூ. 69, ரூ. 83, ரூ. 78}க்கு விற்கப்படுகிறது.

சர்க்கரை விலையைப் பொறுத்தவரை விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தில்லி உள்ளிட்ட வட மாநிலங்களில் இப்போதே ஒரு கிலோ சர்க்கரை ரூ. 50}க்கு விற்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**சூரிய சக்தி மையங்கள்: பிரதமர் வலியுறுத்தல்**

First Published : 12 Jan 2010 12:00:00 AM IST
Last Updated : 12 Jan 2010 02:23:59 AM IST



சூரிய சக்தி தொடர்பாக தில்லியில் திங்கள்கிழமை தொடங்கிய மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங். உடன் (இடமிருந்து) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் பாரூக் அப்துல்லா, வேளாண்துறை அமைச்சர் சரத் பவார், திட்ட கமிஷன் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா.

புதுதில்லி, ஜன. 11: பருவநிலை மாறுபாட்டால் ஏற்படும் சவால்களை சமாளிக்க ஏதுவாக நாடெங்கிலும் சூரிய சக்தி மையங்களை அமைக்கலாம் என்று பிரதமர் மன்மோகன் சிங் திங்கள்கிழமை வலியுறுத்தினார்.

தில்லியில் ஜவாஹர்லால் நேரு தேசிய சூரிய சக்தி திட்டத்தை தொடங்கிவைத்து பிரதமர் பேசியதாவது: சூரிய சக்தி அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டமானது நமது நாட்டின் எரிசக்தி உற்பத்தித்துறையில் பெரும் மாற்றத்தையே கொண்டுவரும் ஆற்றல் கொண்டதாகும். மேலும் பருவ நிலை மாற்றத்தால் உலகம் எதிர்கொள்ளக்கூடிய பாதிப்புகளுக்கு தீர்வு தரக்கூடியதாக இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

சூரிய திட்டத்தின் கீழ் 2022ம் ஆண்டுக்குள் 20 ஆயிரம் மெகா வாட் சூரிய எரிசக்தி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை சாதித்து முடிப்பதற்கு தொழில்துறையினரின் ஒத்துழைப்பும் ஈடுபாடும் அவசியம். மேலும், இந்த இலக்கை நிறைவேற்ற, தகவல் தொழில்நுட்பத்துறையில் பெரும் மாற்றம் கொண்டுவந்த சிலிக்கான் வேலிகள் போல் ஆங்காங்கே சூரிய சக்தி (சோலார் வேலிகள்) மையங்களை அமைக்கவேண்டும்.

இவை சூரிய சக்தி அறிவியல், பொறியியல், ஆராய்ச்சி, கட்டுமானம், உற்பத்திக்கான மையங்களாக இருக்கவேண்டும். இவற்றை தமக்கு கிடைத்த மிகப்பெரிய வர்த்தக வாய்ப்பாக தொழில்துறையினர் எடுத்துக்கொண்டு ஈடுபாடு காட்டவேண்டும்.

அணுசக்தி துறைக்கு அடுத்தபடியாக நாம் இந்த புதிய துறையிலும் அறிவியல் மற்றும் தொழில் ரீதியில் ஈடுபாடு காட்டி வளர்ச்சி காண வேண்டியது அவசியம்.

சூரிய சக்தி திட்டத்தின் கீழ் 2022ம் ஆண்டுக்குள் 20 ஆயிரம் மெகாவாட் சூரிய மின் சக்தி உற்பத்தி என நாம் நிர்ணயித்துள்ள இலக்கு எட்டமுடியாத ஒன்றாக தெரியலாம். ஆனால் இதை சாதிக்க நம்மால் முடியும் என்ற ஒரே சிந்தனையுடன் செயல்பட்டு தேசிய அளவில் முன்னுரிமை கொடுத்து இதற்கான முயற்சியில் இறங்கவேண்டும்.

சூரிய சத்தி திட்டத்தை சாதித்து முடிக்க பல்வேறு அமைச்சகங்களும் அதிகாரிகளும் கைகோர்த்து நின்று செயல்பட வேண்டும். சூரிய சக்தி திட்டமானது அனைத்தையும் ஒன்றுபடுத்தி ஒருங்கிணைத்து செயல்படும் மையமாக பரிணமிக்கவேண்டும்.

அனல் மின்நிலையங்களையே நம்பியிராமல் புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களுக்கு மாறவேண்டும் என்ற இந்த அரசின் கொள்கைக்கு அடித்தளம் இடுவது போல் நாம் அதிக அளவில், சுற்றுச்சூழலை கெடுக்காத தூய்மையான சூரிய மின் சக்தியை பயன்படுத்தவேண்டும்.

நாம் தொடங்கியுள்ள இந்த சூரிய சக்தி திட்டம் இந்த துறையில் இந்தியாவை உலக அளவில் முதலிடத்தில் இடம்பெறச்செய்யும். சூரிய மின்சக்தி உற்பத்தியில் மட்டும் அல்லாது அதற்கான தொழில்நுட்பம் படைப்பதிலும் நம்மால் மற்றவர்களை மிஞ்சி நிற்கமுடியும். இப்போதும் நமது நாட்டில் ஏராளமானோர் சூரிய மின் சக்தியை பயன்படுத்துகின்றனர். இன்னும் இதை விரிவுபடுத்தினால் ஊரக எரிசக்தி துறையில் மிகப்பெரிய மாற்றம் காண்பது உறுதி என்றார் பிரதமர்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் சரத் பவார், பாரூக் அப்துல்லா, ஜெய்ராம் ரமேஷ், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண் காப்பீட்டுத் திட்டம் 5 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.651 கோடி நஷ்டஈடு**

First Published : 11 Jan 2010 03:44:05 AM IST
Last Updated : 11 Jan 2010 12:40:27 PM IST

திருவண்ணாமலை, ஜன.10: தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 18 மாவட்டங்களைச் சேர்ந்த 5 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.651 கோடி நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதன் மண்டல மேலாளர் அன்பரசு வெளியிட்டுள்ள அறிக்கை:

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அனைத்து விதமான உணவுப் பயிர்கள் (தானியங்கள், சிறு தானியங்கள்), பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிக தோட்டக்கலை பயிர்கள் காப்பீடு செய்யப்படுகின்றன. அதே போல் நெல், கேழ்வரகு, சோளம், கம்பு, நிலக்கடலை, எள், உளுந்து, கொள்ளு, பருத்தி, கரும்பு, உருளைக்கிழங்கு, வாழை, மிளகாய், மஞ்சள், வெங்காயம் பயிர்களும் காப்பீடு செய்யப்படுகின்றன.

வெள்ளம், வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குதல் போன்றவற்றால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு காப்பீடு தரப்படுகிறது.குத்தகைத்தாரர்கள், வங்கிக்கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர் உள்பட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். சராசரி மகசூலில் 150 சதம் மதிப்பு வரை காப்பீடு செய்யலாம்.

விவசாயிகள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியிலேயே திட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தின் மூலமாக கடந்த ஆண்டு 18 மாவட்டங்களைச் சேர்ந்த 5 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.651 கோடி நஷ்டஈடு தரப்பட்டுள்ளது.உணவு பயிர்களுக்கு சிறு, குறுவிவசாயிகள், மற்றவர்கள் செலுத்த வேண்டிய காப்பீடு கட்டணம்:

நெல்லுக்கு சிறு விவசாயிகள் ரூ.330-ம், மற்றவர்கள் ரூ.366-ம் பிரீமியமாக செலுத்த வேண்டும். கம்புக்கு ரூ.236, ரூ.262, சோளத்துக்கு ரூ.181, ரூ.201, கேழ்வரகு-ரூ.179, ரூ.199, மக்காச்சோளம்-ரூ.49, ரூ.54, நிலக்கடலை-ரூ.476, ரூ.528, எள்-ரூ.167, ரூ.185, சூரியகாந்தி-ரூ.436, ரூ.484, உளுந்து-ரூ.21, ரூ.23, பச்சையபயிறு-ரூ.124, ரூ.138, கொள்ளு-ரூ.105, ரூ.116.

பணப் பயிர்கள்: நெல் தரிசில் பருத்தி-ரூ.1684, ரூ.1871, பருத்தி-ரூ.649, ரூ.721, மிளகாய்-ரூ.574, ரூ.638, வாழை-ரூ.7411, ரூ.8234, மரவள்ளி-ரூ.2200, ரூ.2444, வெங்காயம்-ரூ.938, ரூ.1042, கரும்பு-ரூ.788, ரூ.876, உருளை-ரூ.410, ரூ.456.

ஒவ்வொரு வட்டாரத்திலும் மாநில அரசின் விவசாயத் துறையினரால் பயிர் அறுவடை காலத்தில் 16, 10 பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்படுகிறது. நடப்புப் பருவத்தின் சராசரி மகசூலை, கடந்த மூன்று அல்லது ஐந்து ஆண்டுக்கால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும் போது நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்துள்ளதோ அந்த விகிதப்படி அந்த வட்டாரத்தில் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் தொகைக்கு ஏற்ப நஷ்டஈடு தரப்படுகிறது.

பயிர் கடன் பெறாத விவசாயிகள்: பயிர் கடன் பெறாத விவசாயிகள் முன்மொழிவுப் படிவத்துடன் கணினி, சிட்டா அல்லது அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து சான்றிதழ் பெற்று தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் பிரீமியத்தை மேலே கூறியுள்ள தேதிக்கு முன் செலுத்த வேண்டும். முன்மொழிவு படிவங்களை விவசாயத்துறையிடமும், கூட்டுறவு வர்த்தக வங்கியிலும் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு: மண்டல மேலாளர், அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட், எண். 323, முதல் தளம், ஆந்திரா இன்சூரன்ஸ் பில்டிங், தம்புச்செட்டித் தெரு, பாரிமுனை, சென்னை-1. தொலைபேசி-044-42051349, 42501350, செல்-9940326750.

**பயிர்களுக்கு பாதுகாப்புக் கோரி விவசாயிகள் மனு**

First Published : 12 Jan 2010 12:32:41 AM IST
Last Updated :

உளுந்தூர்பேட்டை, ஜன.11: காட்டில் வாழும் வன விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கக் கோரி விவசாயிகள் உளுந்தூர்பேட்டை வனவர் நடராஜனிடம் கோரிக்கை மனுவை திங்கள்கிழமை அளித்தனர். அதில் குறிப்பிட்டுள்ளதாவது: உளுந்தூர்பேட்டை வனச்சரகத்திற்கு உட்பட்ட எறஞ்சி, கூத்தக்குடி, சேர்வராயன்குப்பம், சேப்பாக்கம், கொட்டையூர், சீயமங்கலம் உள்பட 20-க்கும் மேற்பட்ட கிராமங்கள் காட்டுப்பகுதியின் ஓரத்தில் உள்ளது.

÷இதனால் விவசாயிகள் பயிரிடப்படும் உளுந்து, மக்காச்சோளம், மணிலா, கரும்பு உள்ளிட்ட பயிர்களை வன விலங்குகளான மான், காட்டுப்பன்றி, மயில் உள்ளிட்டு வன விலங்குகள் வயல்வெளியில் புகுந்து மேற்கண்ட பயிர்களை சேதப்படுத்துகின்றன.

÷இதனால் விவசாயிகள் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகி என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து உளுந்தூர்பேட்டை வனச்சரகர் அலுவலகத்தில் வனவர் நடராஜன் என்பவரிடம் வன விலங்குகளிடமிருந்து விவசாயப் பயிர்களுக்கு பாதுகாப்பு கோரி மனு கொடுத்தனர்.

**உள்நாட்டு சர்க்கரையை 50 கிலோவாக பேக்கிங் செய்ய வலியுறுத்தல்**

First Published : 12 Jan 2010 06:07:41 AM IST
Last Updated :

மதுரை, ஜன.11: உள்நாட்டில் தயாரிக்கப்படும் சர்க்கரையை 100 கிலோவுக்குப் பதிலாக 50 கிலோ மூட்டையாக பேக்கிங் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து இச் சங்கத்தின் தலைவர் எஸ்.பி.ஜெயப்பிரகாசம் மத்திய விவசாயத் துறை அமைச்சர் சரத்பவாருக்கு அனுப்பியுள்ள மனு:

உள்நாட்டில் தயாரிக்கப்படும் சர்க்கரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது 50 கிலோ கொண்ட மூட்டையாக பேக்கிங் செய்து அனுப்பப்படுகிறது. அதே நேரத்தில், உள்நாட்டில் மக்களின் தேவைக்காக அனுப்பும்போது 100 கிலோ கொண்ட மூட்டையாக பேக்கிங் செய்யப்படுகிறது. இந்த வேறுபாடுகளைக் களைந்து உள்நாட்டுத் தேவைக்கு சப்ளை செய்யும்போது 50 கிலோ மூட்டையாக பேக்கிங் செய்து அனுப்ப வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 12 Jan 2010 12:24:46 AM IST
Last Updated :

ஈரோடு, டிச.11: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 88.34அடியாக இருந்தது. விநாடிக்கு 1099 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 2000 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 700 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நீர் இருப்பு 20 டிஎம்சி.

**கறவை மாடு வாங்க கடன் மானியம்**

First Published : 12 Jan 2010 05:25:06 AM IST
Last Updated :

தேனி, ஜன. 11: தேனியில் தாட்கோ மூலம், கறவை மாடு வாங்குவதற்கான கடன் மானியத் தொகைக்கான காசோலைகளை பயனாளிகளிடம் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாளில்,கறவை மாடு வாங்குவதற்குக் கடன் கேட்டு விண்ணப்பம் செய்திருந்தனர்.

இவர்களில் 14 பேர் தேர்வு செய்யப்பட்டு கடன் வழங்கப்பட்டது. இதற்கான மானியத் தொகை, தாட்கோ மூலம் தனி நபர்க் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 2009-10-ம் ஆண்டுக்கான மானியமாக, 14 பேருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் ரூ. 3.50 லட்சத்துக்கான நிதியை ஆட்சியர் பூ. முத்துவீரன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பிருந்தாதேவி, தாட்கோ மாவட்ட மேலாளர் ஞா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

**கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் தேனீ வளர்ப்பு பயிற்சி**

First Published : 12 Jan 2010 03:14:22 AM IST
Last Updated :

திருநெல்வேலி, ஜன. 11:   வல்லநாடு அருகே உள்ள கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் தேனீ வளர்க்க பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒரு நாள் நடைபெற்ற இப் பயிற்சி முகாமில் 26 பேர் பங்கேற்றனர்.

பயிர் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் விவசாயிகளுக்கு பயிற்சிகளையும், விளக்கங்களையும் அளித்தனர்.

மழைக்காலங்களில் தேனீக்களை பெருக்குவது, பாதுகாப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இதற்கு கல்லூரியின் முதல்வர் ஆர். ராஜராஜன் தலைமை வகித்தார்.

அடுத்த பயிற்சி மார்ச் 9 ஆம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வோர் முன்பதிவு

செய்து கொள்ள வேண்டும். முன்பதிவு செய்ய 04630 -261226, 261212 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

**மானிய விலையில் தெளிப்பு நீர் பாசனக்கருவி**

First Published : 12 Jan 2010 12:26:23 AM IST
Last Updated :

ராசிபுரம், ஜன.11: ராசிபுரம் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில், தேசிய வேளாண்மை வளர்ச்சிச் திட்டத்தில் பயறுவகை மற்றும் எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் தெளிப்பு நீர் பாசனக் கருவி 50 சதம் மானியத்தில் வழங்கப்படுகிறது என ராசிபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் ந.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

ராசிபுரம் பகுதியில் குறைந்த அளவு மழை பெய்துள்ளதால், மானிய விலையில் தெளிப்பு நீர் பாசனம் பெற்று நிலத்தடி நீரை பயன்படுத்தி, பயறுவகை பயிரிடுமாறு தெரிவித்துள்ளார்.

தினமலர்

## மரபணு மாற்றம் ஆன 'பிடி' கத்தரிக்காய்: நாடு முழுவதும் விளக்க மந்திரி திட்டம்

ஜனவரி 12,2010,01:10 IST



புதுடில்லி : மரபணு மாற்றம் செய்யப்பட்ட "பிடி' கத்தரிக்காய் பற்றி, நாளை முதல் தொடங்கும் தொடர் கூட்டங்களில், மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் விளக்க முன்வந்திருக்கிறார்.இதுகுறித்து மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சக வட்டாரங்கள் கூறியதாவது:மரபணு மாற்றம் செய்யப்பட்ட "பிடி' கத்தரிக்காய்களை, வர்த்தக ரீதியாக பயிரிட, உயிரி தொழில்நுட்ப ஒழுங்கு முறை ஆணையம் கடந்த ஆண்டு ஒப்புதல் வழங்கியது.

சர்ச்சைக்குரிய இந்த கத்தரிக்காய்கள் பற்றி, நாளை கோல்கட்டாவில் நடைபெறும் கூட்டம் ஒன்றில், மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் ஆலோசனை கேட்கிறார். அதைத் தொடர்ந்து, வரும் 16ம் தேதி புவனேஸ்வரிலும், 19ம் தேதி ஆமதாபாத்திலும், 22ம் தேதி ஐதராபாத்திலும், 23ம் தேதி பெங்களூரிலும், 27ம் தேதி நாக்பூரிலும், 30ம் தேதி சண்டிகாரிலும் பேசுகிறார்.இந்த கூட்டங்களில் விஞ்ஞானிகள், விவசாய நிபுணர்கள், விவசாயிகள் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், நுகர்வோர், தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்வர். இவ்வாறு அமைச்சக வட் டாரங்கள் கூறின.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்களை, ஐதராபாத்தைச் சேர்ந்த மகிகோ மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த மான்சான்ட்டோ நிறுவனம் கூட்டாகச் சேர்ந்து, உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.இந்த கத்தரிக்காய்களுக்கு ஒப்புதல் அளித்ததற்கு, ம.பி., சட்டீஸ்கர், கேரளா, மேற்கு வங்கம், தமிழகம் மற்றும் ஒரிசா மாநிலங்கள் ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிரை விளைவிக்கும் போது, பிற்காலத்தில் தொடர்ந்து தேவைப்படும் விதைக்கு பெரிய கம்பெனிகளை சார்ந்திருக்க வேண்டும். அதே போல, கத்தரியில் 70க்கும் மேற்பட்ட ரகங்கள் இந்தியாவில் உள்ளன. அதை இம்முயற்சி அழிக்கும் என்பது எதிர்ப்பாளர்கள் கருத்தாகும்.

சுற்றுச்சூழல் ஆய்வாளர் சுனிதா நரேன் கூறுகையில், "நுகர்வோர் தங் களுக்கு மரபணு மாற்றம் செய்யப் பட்ட உணவு பொருட்கள் தேவையா என, தேர்வு செய்ய வாய்ப்பு வழங் கும் லேபிளிங் முறை, தற்போது இந்தியாவில் இல்லை' என்றார்.

## இவர், இப்படி...:புள்ளியியல் துறை வளர்ச்சியை ஊக்குவித்த அறிஞர்

ஜனவரி 12,2010,00:00 IST



கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 97வது இந்திய அறிவியல் மாநாட்டில், பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இருந்து, "இந்திய அறிவியல் விருதை' பெற்றவர், பேராசிரியர் கால்யம்புடி ராதாகிருஷ்ண ராவ்; வயது 90. இவர், சி.ஆர்.ராவ் என்ற பெயரிலேயே மிகவும் பிரபலம்.

இவர், புள்ளியியல் துறை வளர்ச்சிக்காக, தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர். புள்ளியியல் துறை, அறிவியலின் புதிய கிளையுடன் தொடர்புடையது. சி.ஆர்.ராவின் கோட்பாடுகள், நவீன புள்ளியியல் துறைக்கு அடித்தளம் அமைத்தன. சி.ஆர்.ராவ், கர்நாடக மாநிலத்தில் பிறந்தவர். ஆனால், இவரது குடும்பத்தினர், விசாகப்பட்டினத்தில் சென்று குடியேறினர். அங்கு, அவர் கணிதத் துறையில் முதுகலை பட்டம் பெற்றார்.கணிதத் துறையில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ராவ், கடந்த 1940ம் ஆண்டு, ராணுவத்தில் வேலை தேடி விசாகப்பட்டினத்தில் இருந்து கோல்கட்டாவிற்கு ரயிலில் பயணித்தார். ஆனால், அவருக்கு ராணுவத்தில் வேலை கிடைக்கவில்லை.

எனவே அவர், கோல்கட்டாவில் அமைந்துள்ள இந்திய புள்ளியியல் மையத்தில் ஓராண்டு பயிற்சிக்காக விண்ணப் பித்தார். அந்த மையம், கேம்பிரிட்ஜில் பயிற்சி பெற்ற, பேராசிரியர் பி.சி.மகாலநோபிஸ் என்பவரால் கடந்த 1931ம் ஆண்டு நிறுவப்பட்டது. மகாலநோபிஸ் இயற்பியல் விஞ் ஞானி. அங்கு சேர அவருக்கு, 1941ம் ஆண்டு அனுமதி கிடைத்தது. அதன் பின், அவர், உலகளவில் பேசப்படும் புள்ளியியல் துறை வல்லுனராக உருவானார்.பின், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில், நவீன புள்ளியியல் துறையின் தந்தை என அழைக்கப்படும் ஆர்.ஏ.பிஷரின் கீழ், பிஎச்.டி., பட்டம் பெற்றார்.

இந்த காலகட்டத்தில் சி.ஆர்.ராவ், பிரபலமாக பேசப்படும் வகையில் பல்வேறு பணிகள் ஆற்றினார்.சி.ஆர்.ராவின் தந்தை பிரிட்டீஷ் ஆட்சியில், போலீஸ் துறையில் பணியாற்றினார். அவரது தாயார் லட்சுமி காந்தம்மா. இவருக்கு திருமணமாகும் போது வயது 20. இவருக்கு 17 ஆண்டுகளில் 10 குழந்தைகள் பிறந்தனர். அவர்களில், ஆறாவது அல்லது ஏழாவதாக பிறந்தவர் தான் சி.ஆர்.ராவ் எனக் கூறப்படுகிறது.சி.ஆர்.ராவின் தந்தை வேலை காரணமாக பெரும்பாலான நேரங்கள் வெளியில் சென்று விடுவார். அவரது தாய் தான் குழந்தைகளை கவனித்துக் கொள்வார்.

இதுகுறித்து சி.ஆர்.ராவ் கூறுகையில், "என் தாய் மிகவும் கண்டிப்பானவர். அவர், எங்களின் அன்றாட நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவார். விளையாட, தூங்க என்று ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்குவார். இவை தான் என் வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைபிடித்து வெற்றி பெற உதவின' என்றார்.

### சூரிய வெப்பம் மூலம் மின்சாரம்: யூனிட் ரூ. 5க்கு தர அரசு திட்டம்

ஜனவரி 12,2010,00:00 IST




சூரியவெப்பம் மூலமாக, மின்சார உற்பத்தியை பெருக்கி, ஐந்து  ரூபாய்க்கு ஒரு யூனிட் மின்சாரத்தை மக்களுக்கு அளிக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக,  2022ம் ஆண்டுக்குள் சூரியஒளி வாயிலாக 20 ஆயிரம் மெகாவாட் மின்சார உற்பத்தி செய்திடவும் திட்டமிட்டுள்ளது. தற்போது, மின்சார உற்பத்தி என்பது நிலக்கரி, நீர், காற்று ஆகியவற்றின் மூலம் மின்சார உற்பத்தி பெருமளவில் செய்யப்படுகிறது. இது தவிர அணுசக்தியை பயன்படுத்தியும் மின்சார உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதற்காகவே அமெரிக்காவுடன் இந்தியா, அணுசக்தி ஒப்பந்தம் போட்டுள்ளது.

இந்நிலையில், சூரியவெப்பத்தை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களை முடுக்கிவிட, மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ஜவகர்லால் நேரு நேஷனல் சோலார் மிஷன் என்ற பெயரில், மின் உற்பத்தி திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இதற்கான துவக்கவிழா, நேற்று டில்லியில் நடைபெற்றது. விஞ்ஞான் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டு இந்த திட்டத்தை துவக்கி வைத்தார்.

மரபுசாரா எரிசக்தி அமைச்சகமும் இந்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த விழாவில்,  பிரதமர் மன்மோகன் சிங் பேசுகையில், கூறியதாவது : சூரியனை தெய்வமாக மக்கள் வழிபடுகின்றனர். சூரியனில் இருந்து வரும் ஒளிதான் அனைத்து எரிசக்திகளுக்குமே ஆதார சக்தி. அத்தகைய சூரியன் வாயிலாக மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்பது, மிகவும் சிறந்த நடவடிக்கையாகவே இருக்கும். அமெரிக்காவில், சிலிக்கான் பள்ளத்தாக்கு என்றாலே, தகவல் தொழில்நுட்பத்துறையின் சிறப்பை புரிந்து கொள்ள இயலும். சிலிக்கான் பள்ளத்தாக்கு காரணமாக, அமெரிக்காவுக்கு பெரிய புகழ் கிடைத்துள்ளது.

அதுபோல, இந்தியாவில் சோலார் பள்ளத்தாக்குகளை உருவாக்கலாம். இத்தகைய பள்ளதாக்குகளை இந்தியாவால் உருவாக இயலும். சோலார் மின் உற்பத்தியை, மிகப்பெரிய அளவில் செய்வதன் மூலம், சர்வதேச அளவில் இந்தியா மின்சார உற்பத்தியில் கொடிகட்டி பறக்க முடியும். இவ்வாறு மன்மோகன் சிங் பேசினார் .
இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மரபுசாரா எரிசக்தி துறை அமைச்சர் பரூக் அப்துல்லா பேசியதாவது: சோலார் மின்உற்பத்தி திட்டத்தை, நாடு முழுவதும் பெரிய அளவில் பிரபலப்படுத்த வேண்டும். வரும் 2022ம் ஆண்டுக்குள் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திடும் அளவுக்கு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இப்போது, இந்த ஜவகர்லால் நேரு தேசிய  சூரியவெப்ப மின்சார உற்பத்தி திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள், இந்த திட்டத்தின் மூலம் ஆயிரத்து 300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. என்.டி.பி.சி., நிறுவனத்தில், தற்போது வர்த்தக பிரிவு இயங்கி வருகிறது. தற்போது துவங்கப்பட்டுள்ள திட்டத்தின் வாயிலாக, தயாரிக்கப்படும் மின்சாரத்தில் ஒரு மெகாவாட் யூனிட் மின்சாரம், என்.டி.பி.சி., நிறுவனம் வாங்கினால், அந்நிறுவனத்திற்கு நான்கு மெகாவாட் அனல்மின்சாரம் வழங்கப்படும். விலை விவரங்கள் அடிப்படையில் கூறுவதானால், ஒரு யூனிட் சூரியமின்சாரத்தை 18  ரூபாய்க்கு வாங்கினால், ஒரு யூனிட் அனல்மின்சாரம் இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும். இவ்வாறு அனல்மின்சாரத்துடன் இணைத்து

சூரியவெப்ப மின்சாரத்தையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இணைத்து வழங்கும்போது, பொதுமக்களும் பயன்பெறும்வகையில், ஒரு யூனிட் மின்சாரம் ஐந்து ரூபாய்க்கு வழங்கமுடியும். உலக வெப்பமாதல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு சோலார் திட்டங்களை வெகு வேகமாக நாடுமுழுவதும் அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதை சட்டவிதிமுறையாக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இந்த சோலார் மின்சார உற்பத்தி திட்டத்தின் நடவடிக்கைகளின் சாதக பாதகங்கள் அனைத்தும், கடும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். ஏற்கனவே அசாமில் உள்ள ஹசன்சால் என்ற இடத்திலும், பஞ்சாப்பில் உள்ள அமிர்தசரசிலும் சோலார் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளது. இவை இரண்டுமே, தலா இரண்டு மெகாவாட் மின்உற்பத்தி திட்டங்கள் ஆகும்.சூரிய வெப்பம் மூலமாக மின்சாரம் தயாரிப்பதில் மிகப்பெரிய வெற்றியை பெற்று விட்டால், உலகின் மிகவல்லமை மிக்க நாடாக இந்திய மாறிவிடும். இவ்வாறு அமைச்சர் பரூக் அப்துல்லா பேசினார்.

## ஆனைமலை கொப்பரை ஒரு கிலோ 31.40 ரூபாய்

பொள்ளாச்சி: ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 31.40 ரூபாய் விலை கிடைத்தது.ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 22 பேர் 27 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு எடுத்து வந்தனர். இவைகளை தரம் பிரித்து மூன்று வியாபாரிகள் ஏலம் கூறினர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 21 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 27.25 ரூபாய் முதல் அதிகபட்சமாக 31.40 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 6 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 18.50 ரூபாய் முதல் அதிகபட்சமாக 21.60 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறியதாவது:

ஆனைமலை விவசா�யிகள் பொங்கல் பண்டிகைக்கு தயாராகிக்கொண்டுள்ளதால் கொப்பரை உற்பத்தி குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகை முடிந்த பிறகு, கொப்பரை உற்பத்தி அதிகரித்து, விலையும் சூடுபிடிக்கும் என்றனர்.கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில்50 கிலோ எடையுள்ள 600 மூட்டைகளில் உள்ள கொப்பரைகளை பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தினர் கிலோ ஒன்றுக்கு 44.50 ரூபாயுக்கு எடுத்தனர். டிச.28ல் 326ம், டிச.29ல் 327 மூட்டைகள் முதல் தர கொப்பாரை கொள்முதல் செய்யப்பட்டது.தற்போது, இருப்பு பரிசோதனை முடிந்தது, விவசாயிகளுக்கு தெரியாததால், குறைந்த விவசாயிகளே வந்ததால், 192 மூட்டை கொப்பரை தேங்காய் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. கொப்பரை கொள்முதல் டிச.31ம் தேதியுடன் முடிவடைந்து, கொப்பரை இருப்பு பரிசோதனை செய்து மார்ச் மாதம் வரை கொப்பரை கொள்முதல் செய்யப்படவுள்ளது.

## பொங்கலுக்கு வந்தது கரும்பு விலையில் மாற்றம் இல்லை

கோவை: பொங்கல் பண்டிகைக்கு நான்கு நாட்களுக்கு முன்னதாகவே கரும்பு விற்பனை கோவை டி.கே., மார்க்கெட்டில் துவங்கிவிட்டது.இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு கரும்பு விளைச்சல் கிடைத்துள்ளது. திருச்சி, நத்தம், மணப்பாறை, திண்டுக்கல், தேனி, மதுரை, சங்ககிரி, சேலம் பகுதிகளிலிருந்து கரும்பு கோவைக்கு வந்துள்ளது. தமிழகத்தில், பருவமழை நன்றாக இருந்ததால், கரும்பு விளைச்சலில் பாதிப்பு இல்லை. கோவைக்கு நேற்று 10 டன் எடையுள்ள 4 ஆயிரம் கரும்புகள் வந்து சேர்ந்தது. கட்டின் மொத்த விலை, ரூ. 170 க்கு விற்பனையாகிறது.

சில்லரை விலையில் ஒரு கரும்பு ரூ. 20 முதல் ரூ. 25 வரை விற்பனை செய்யப்படுகிறது.கரும்பு வியாபாரிகள் கூறியதாவது:இந்த ஆண்டு நல்ல மழை, நல்ல விளைச்சல் இருந்ததால், விவசாயிகள் கரும்பு விலையை குறைக்கவில்லை. கரும்பு வியாபாரிகளுக்கு கட்டு ரூ. 100 க்கே கிடைக்கிறது. ஆள்கூலி, வண்டிவாடகை, கடை

வாடகை ஆகியவற்றை சேர்த்தால் குறைந்த லாபம் தான் கிடைக்கும். ஆண்டுக்கொருமுறை கரும்பு வியாபாரம் செய்து வருகிறோம். கோவைக்கு இன்று ஆறு லோடு கரும்பு லாரிகளில் வரவுள்ளது. வெண்கரும்பு, நாம கரும்பு, பேய்க்கரும்பு, பூவன் கரும்பு, செங்கரும்பு என்று கரும்பு ரகத்தில் பல வகைகள் உள்ளன. பொங்கல் விழாவிற்கு இறைவனுக்கு படைக்க பூவன் கரும்பான கருப்பு நிற கரும்பு ரகத்தை பயன்படுத்துகிறோம். மற்ற ரகங்கள் அனைத்தும் சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு ஜூஸ் சென்டர்களுக்கும் அனுப்புவோம்.இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.காப்பு கட்டுக்காக பூளைப்பூ, ஈரோடு, தாராபுரம் பகுதியிலிருந்து விற்பனைக்கு வந்தது. பூமார்க்கெட் பகுதியிலுள்ள ரோட்டோரம் பூளைப்பூ குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கட்டு மூன்று ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை விற்பனையாகிறது.

### தரமான விதை நெல் உற்பத்திகுறித்த பயிற்சி கூட்டம்

விருத்தாசலம்: விருத்தாசலம் அடுத்த நல்லூர் பகுதியில் இலங்கியனூர் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு தரமான விதை நெல் உற்பத்தி குறித்த பயிற்சி கூட்டம் நடந்தது.வட்டார வேளாண் உதவி இயக்குனர் அப்பன் ராஜ் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். உதவி விதை அலுவலர் இளங்கோவன் பயிற்சி அளித் தார். உதவி வேளாண் அலுவலர்கள் இளவரசன், ராமசாமி, செந்தில்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பொங்கல் பண்டிகையால் பூக்கள் விலை உயர்வு

திண்டுக்கல் : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூக்களின் விலை அதிகரிக்கத் துவங்கியுள்ளது.
கடந்த சில நாட்களாக பனி மூட்டம்,மழையால் பூக்களின் வரத்து பாதிப்படைந்துள்ளது. மேலும் வரத்து குறைந்திருந்தபோதும், போதியளவு வெளியூர் வியாபாரிகள் வரவில்லை. இதனால் அனைத்து பூக்களின் விலையும் குறைந்திருந்தது.

பொங்கல் பண்டிகைக்கு இரண்டு நாட்களே உள்ள நிலையில், நேற்று திண்டுக்கல் மார்க்கெட் டில் பூக்களின் விலை அதிகரித்தது. கடந்த வாரத்தில் ஒரு கிலோ 110 ரூபாயாக இருந்த காக்கரட்டான், 250 ரூபாயாக அதிகரித்திருந்தது. மேலும் 220 ரூபாயாக இருந்த கனகாம்பரம், 500க்கு விற்பனையானது.

எட்டு ரூபாயாக இருந்த செண்டுமல்லி 20க்கும்,40 ஆக இருந்த சம்மங்கி 80க்கும், 15 ஆக இருந்த செவ்வந்தி 40க்கும், 30 ஆக இருந்த அரளி 80க்கும், ரோஜா 20க்கும் விற்கப் பட்டது.

வியாபாரி ஒருவர் கூறுகையில், "பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியூர் வியாபாரிகள் அதிகளவில் வரத்துவங்கியுள்ளனர். பெரும்பாலான பூக் கள் வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரிக்கத் துவங்கியுள்ளது. இவை அடுத்த இரண்டு நாட்களில், மேலும் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது' என்றார்.

### பரோடா முருங்கை கிலோ ரூ.100

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் முருங்கை விலை கிலோ நூறு ரூபாய்க்கு விற்றது.
ஒட்டன்சத்திரம் மார்க் கெட்டில் உள்ளூர் முருங் கை வரத்து முற்றிலும் நின்று போனதால், பரோடாவில் இருந்து லாரிகளில் முருங்கை கொண்டு வரப் பட்டு விற்பனை செய்யப் படுகிறது. இதன் விலை படிப்படியாக அதிகரித்து ஞாயிறன்று என்றும் இல்லாத அளவில் கிலோ நூறு ரூபாய்க்கு விற்றது.

### ரூ.29 லட்சத்தில் வேளாண் வணிக மையம் ஓசூர் அடுத்த பூதிநத்தத்தில் ஏற்பாடு

ஓசூர்: ஓசூரில் காய்கறிகள் உற்பத்தி அதிகமாகி வருவதால், உழவர் சந்தையை போல் பூதிநத்தம் கிராமத்தில் இடைத்தரர்கள் இன்றி விவசாயிகள் நேரடியாக காய்கறிகளை விற்பனை செய்யும் வகையில், வேளாண் துறை மூலம் 29 லட்ச ரூபாய் மதிப்பில் வேளாண் வணிக மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் மிதமான தட்ப வெப்ப நிலையும், குளிர்ந்த கால நிலையும் பயன்படுத்தி விவசாயிகள் மலர்கள், காய்கறிகள் அதிகம் சாகுபடி செய்கின்றனர். மாவட்டத்தில் 9,773 ஹெக்டேரில் காய்கறிகள் சாகுபடி நடக்கிறது.

குறிப்பாக ஓசூர் தாலுகாவில், 6,000 ஹெக்டேரில் காய்கறிகள் சாகுபடி நடக்கிறது. ஓசூர், பாகலூர், பேரிகை, தொரப்பள்ளி, பூனப்பள்ளி, பேளகொண்டப்பள்ளி, தட்டிகானப்பள்ளி, பூதிநத்தம், சாமனப்பள்ளி, சானமாவு உள்ளிட்ட பகுதியில் ஆண்டு முழுவதும் எல்லா பருவங்களிலும் அதிகளவு காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு, ஆண்டு காய்கறிகள் உற்பத்தி பரபரப்பு அதிகரித்து வருகிறது. ஓசூர் மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் உற்பத்தியாகும் காய்கறிகளை, விவசாயிகள் ஓசூர் உழவர்சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

இதனால், உழவர் சந்தைக்கு விற்பனைக்கு வரும் காய்கறிகள் எடை நாளுக்கு, நாள் அதிகரித்து வருகிறது. கடந்த காலத்தில் 50 முதல் 60 டன் வரை மட்டும் காய்கறிகள் வந்தது. கடந்த ஓராண்டாய் தினம் 100 முதல் 140 டன் வரை காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது. உழவர்சந்தைக்கு காய்கறிகள் வரத்து அதிகமாகி வருவதால், விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை. வியாபாரிகள், உழவர் சந்தையில் குறைந்த விலைக்கு காய்கறிகள் வாங்கி, கர்நாடகா, ஆந்திராவுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்து நல்ல லாபம் சம்பாதிக்கின்றனர். இடைத்தரர்கள் முறையை ஒழிக்க தமிழக அரசு கொண்டு வந்த உழர்சந்தையால், ஓசூர் விவசாயிகளுக்கு எந்த பலனும் கிடைக்காத நிலை ஏற்பட்டது. மாவட்ட வேளாண்துறை நிர்வாகம், ஓசூர் தாலுகாவில் உற்பத்தியாகும் காய்கறிகளை இரு இடங்களில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் இடைத்தரர்களை கட்டுப்படுத்துவதோடு, விவசாயிகளுக்கும் கட்டுப்பாடியான விலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

மாவட்ட வேளாண் துணை இயக்குனர் லஷ்மராஜ் நமது நிருபரிடம் கூறியதாவது: தமிழகத்தில் ஓசூர் தாலுகாவில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தியாகிறது. விவசாயிகள் தங்கள் சொந்த பூமியில் விளையும் காய்கறிகள் அனைத்தையும் ஒரே இடத்தில் விற்பனை செய்வதால், காய்கறிகளுக்கு மவுசு குறைகிறது. இதனால், ஓசூர் தாலுகாவில் ஓசூரை தவிர, காய்கறிகள் அதிகம் விளையும் பூதிநத்தம், தட்டிகானப்பள்ளி, ஏ.சாமனப்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டார கிராம பகுதிகளை உள்ளடக்கி, பூதிநத்தம் கிராமத்தில் உழவர்சந்தையை போல் விவசாயிகள் நேரடியாக காய்கறிகளை விற்பனை செய்ய வேளாண் வணிக மையம் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. மாவட்ட வேளாண்துறை மூலம் 28 லடசத்து 83 ஆயிரம் ரூபாயில் வேளாண்வணிக மையத்துக்கு, கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதற்கான இடத்தை, ஓசூர் ஆர்.டி.ஓ., தலைமையில் மாவட்ட வேளாண்மை துறை துணை இயக்குனர் லஷ்மராஜ், ஓசூர் வேளாண்மை அலுவலர் முனிகிருஷ்ணன், உதவி வேளாண்மை அலுவலர் சுரேஷ் ஆகியோர் சென்று பார்வையிட்டோம். கட்டுமான பணிகள் விரைவில் துவங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பட்டு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியை அடுத்த தகரப்பட்டி கிராமத்தில் பட்டு வளர்ச்சி துறை சார்பில் தொகுப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டு வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது. உதவி இயக்குனர் கோலப்பா பிள்ளை தலைமை வகித்து, பயிற்சியை துவக்கி வைத்தார். மத்திய பட்டு வளர்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தாஹிராபீவி இளம் புழு வளர்ப்பு செய்வதின் அவசியம் மற்றும் பயன் குறித்தும், மாசிலாமணி மல்பரிக்கு நூண்ணூட்ட உயிர் உரங்கள் இடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கினர். இளநிலை ஆய்வாளர்கள்

விஜயன், சென்னகேசவன், சங்கர், சுப்பிரமணியன் மற்றும் மல்பரி விவசாயிகள் கலந்து கொண்டனர். முருகன் நன்றி கூறினார்.

### வேளாண் வளர்ச்சி திட்ட மானியம் அறிவிப்பு

திருமங்கலம் : திருமங்கலம் வட்டாரத் தில் நடப்பு ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் எண்ணை வித்து, பயறு, பயிர்களுக்கு நீர்தூவுவான் (ஸ்பிரிங்லர்) அமைத்திட எக்டேர் ஒன்றுக்கு ரூ. 7500/- மானியம் வழங்கப்படுகிறது.

நுண்ணீர் பாசனம் அமைத்திட விரும்பும் விவசாயிகள், வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ள வேண்டுமெனவும், மேலும் 50 சதவீத மானியத்தில் டி.ஏ.பி., உரங்கள் மற்றும் ஜிப்சம் போன்ற இடுபொருட்களும் வழங்கப்படுவதால் அவற்றை வாங்கி விவசாயிகள் பயன்பெறலாம்.

### அனைத்து ஆலைகளுக்கும் கரும்பு விநியோகம் : மத்திய, மாநில அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை

சேலம்: "குறிப்பிட்ட பகுதியில் உள்ள சர்க்கரை ஆலைக்கு தான் கரும்பு விநியோகிக்க வேண்டும் என்றில்லாமல், அனைத்து ஆலைகளுக்கும் சப்ளை செய்யும் உரிமையை மத்திய, மாநில அரசுகள் வழங்க வேண்டும்' என, விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். சேலத்தில் இந்திய விவசாயிகள் சங்க கூட்டமைப்பு(சிஃபா) பொதுச்செயலாளர் விருத்தகிரி கூறியதாவது: இந்தியாவில் உள்ள 110 கோடி மக்கள் தொகையில், 70 கோடி பேர் விவசாயிகளாக உள்ளனர். வேளாண் சார்ந்த தொழில் மோசமான நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. கரும்புக்கான கொள்முதல் விலை பிற மாநிலங்களில் அதிகப்படியாக உள்ளது. ஆனால், தமிழகத்தில் டன்னுக்கு 1,500 ரூபாய் வழங்கப்படுகிறது. வெட்டுக்கூலி, ஏற்றுக்கூலி, இறக்கு கூலியென, அதில் மட்டுமே 700 ரூபாய் வரை செலவாகிறது. கரும்பை நடவு செய்யும் விவசாயிகள் ஆலைகளில் பதிவு செய்யக்கூடாது. பதிவு செய்யாத விவசாயிகளுக்கு தான் கூடுதல் விலை கிடைக்கிறது. கரும்புகளை பயிரிட்டுள்ள பகுதிகளில் உள்ள சர்க்கரை ஆலைக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதை மாற்றி அனைத்து ஆலைகளுக்கும் வழங்கலாம் என்ற உத்தரவை மத்திய, மாநில அரசுகள் அமல்படுத்த வேண்டும். சர்க்கரை மூலம் கிடைக்கும் லாபத்தை, ஆலைகளுக்கும், விவசாயிகளுக்கும் பிரித்து கொடுக்கும் 5ஏ என்ற சட்டம் பார்லிமென்டில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த சட்டத்தை மீண்டும் கொண்டு வரவேண்டும் என தமிழக எம்.பி.,க்கள் வலியுறுத்த வேண்டும். பிற மாநிலங்களில் கரும்பு டன்னுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் 2,800 ரூபாய் வழங்க வேண்டும். அவ்வாறு கரும்புக்கு உரிய விலை கிடைக்காதபட்சத்தில் கரும்பு பயிரிட விவசாயிகள் முன்வரமாட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்

### மேட்டூர் அணை நீர்திறப்பு குறைப்பு

மேட்டூர்: டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை பெய்ததால் மேட்டூர் அணை நீர்திறப்பு 6,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டது. பயிர்கள் அறுவடைக்கு தயாராக இருப்பதால் பாசனத்திற்கான நீர்தேவை குறைந்தது. அதனால், டெல்டா நீர்திறப்பு கடந்த9ம் தேதி விநாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. நேற்று டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை பெய்ததாலும், பாசனத்திற்கான நீர்தேவை குறைந்ததாலும் மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு நேற்று காலை 8 மணி முதல் விநாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக குறைக்கப் பட்டது

### கசக்கிறது விளைச்சல் குறைவால் கரும்பு விலை... சேலம் மாவட்டத்தில் ஜோடி ரூ.30

சேலம்: சேலம் மாவட்டத்தில் நடப்பாண்டு செங்கரும்பு விளைச்சலில் சரிவு ஏற்பட்டுள்ளதால், மார்க்கெட்டுக்கு குறைந்த அளவிலேயே கரும்பு விற்பனைக்கு வருவதால், விலையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் அதிக அளவில் கரும்பு சர்க்கரைக்காக பயிரிடப்படுகின்றன. குறைந்த அளவிலான விவசாயிகள் பொங்கல் சீஸன் காலத்திற்காக செங்கரும்புகளை பயிரிட்டு இருந்தனர். சில ஆண்டுகளாக ஆலைகளுக்கான கரும்புக்கு மவுசு அதிகரித்ததன் எதிரொலியாக அதிக அளவிலான விவசாயிகள் செங்கரும்புக்கு மாற்றாக சர்க்கரைக்கான கரும்புகளை பயிரிட்டனர். சேலம் மாவட்டத்தில் சித்தர் கோவில் பகுதியை சுற்றியுள்ள முருங்கப்பட்டி, லக்கம்பட்டி, நல்லாம்பட்டி ஆகிய பகுதிகளில் 150க்கும் மேற்பட்ட தோட்டங்களில் செங்கரும்பு பயிரிடப்படுவது வழக்கம். கடந்த ஆண்டு நல்ல மழை பெய்த போதிலும் 100க்கும் குறைவான தோட்டங்களில் மட்டும் செங்கரும்பு பயிரிடப்பட்டு இருந்தது. கடந்த டிசம்பர் வரை இத்தோட்டங்களை குத்தகைக்கு எடுக்க வியாபாரிகள் தயக்கம் காட்டி வந்ததால், விவசாயிகள் மத்தியில் கவலை ஏற்பட்டு இருந்தது. இந்நிலையில், பெங்களூரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சேலம் மாவட்டத்தின் செங்கரும்புகளுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளதை அடுத்து அதிக அளவிலான வியாபாரிகள் இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள செங்கரும்பு தோட்டங்களை குத்தகைக்கு எடுத்து பெங்களூருக்கு விற்பனைக்கு கொண்டு சென்று விட்டனர்.
ஒரு வாரமாக இப்பகுதியில் விளைவிக்கப்படும் செங்கரும்புகளை கொள்முதல் செய்ய 25க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்துள்ளனர். அத்துடன் உள்ளூர் வியாபாரிகளும் அதிக அளவில் அட்வான்ஸ் கொடுத்து கரும்பு தோட்டங்களை குத்தகைக்கு எடுப்பதால் விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.கரும்பின் விலை மற்றும் தோட்டத்தின் மொத்த குத்தகை தொகையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது.

செங்கரும்புக்கு தமிழகத்தின் பிற மாவட்டங்களில் நல்ல விலை கிடைப்பதால் அறுவடை செய்யப்படும் கரும்புகள் லாரிகளில் ஏற்றப்பட்டு பெங்களூரு மற்றும் மதுரை, கோவை, ஈரோடு, நாமக்கல் என வெளி மாவட்டங்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. வெளி மாவட்டங்களுக்கு மொத்தமாக வியாபாரிகள் விற்பனைக்கு கொண்டு சென்று விடுவதால் குறைந்த அளவிலான கரும்புகளே சேலத்துக்கு விற்பனைக்கு வருகிறது. வழக்கமாக பொங்கல் பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே ரோடுகளிலும், பொது இடங்களிலும் தற்காலிக கரும்பு கடைகள் அதிக அளவில் போடப்படும். நடப்பாண்டு கரும்பின் வரத்து சரிவு, விலை உயர்வால் தற்காலிக கடைகள் இன்னும் போடப்படவில்லை. உழவர் சந்தைகள், மார்க்கெட்டுகளில் குறைந்த அளவிலான வியாபாரிகளே கரும்பு விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றைய  நிலவரப்படி உழவர் சந்தைகளில் ஒரு ஜோடி கரும்பு 20 ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில் ஒரு ஜோடி கரும்பு 30 ரூபாய்க்கும் விற்கிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டு கரும்பின் விலை இருமடங்காக உயர்ந்துள்ளது. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் கரும்பின் வரத்தில் ஏற்பட்டுள்ள  கடும் சரிவால் விலையில் மேலும் உயர்வு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர். கரும்பு விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு கரும்பு பிரியர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. கரும்பு வியாபாரி தங்கவேல் கூறுகையில், ""தற்காலிக வியாபாரிகள் யாரும் கரும்பு விற்பனைக்கு வர ஆர்வம் காட்டவில்லை. தற்போது செங்கரும்பு ஜோடி 30 ரூபாய்க்கு விற்கப்படுவது இன்னும் இரண்டு நாட்களில் ஜோடி 50 ரூபாய்க்கு விற்கப்படும்,'' என்றார்

## ராபி பயிர் காப்பீடு திட்டம் விவசாயிகள் பயன்பெற கலெக்டர் அழைப்பு

தஞ்சாவூர்: ராபி பருவத்தில் பயிரிடப்படும் பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்திட தஞ்சாவூர் கலெக்டர் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அக்டோபர் மாதம் துவங்கி மார்ச் மாதம் முடிவடையும் ரபி பருவத்தில் பயிரிடப்படும் கடலை, மக்காச்சோளம், எள், உளுந்து, பயறு, கரும்பு, வாழை, பருத்தி, வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய மார்ச் 31ம் தேதி கடைசி நாளாகும். ஏக்கர் வாரியாக பிரிமியத்தொகை கடலைக்கு 356 ரூபாய், உளுந்து 47 ரூபாய், பயறு 65 ரூபாய், எள் 113 ரூபாய், கரும்பு ஆயிரத்து 752 ரூபாய், வாழை, 16 ஆயிரத்து 468 ரூபாயாகும். ஏக்கருக்கு உத்தேச மகசூலுக்கு காப்பீடு செய்யும் மதிப்பு கடலை 17 ஆயிரத்து 800 ரூபாய், உளுந்து இரண்டாயிரத்து 340, பயறு மூன்றாயிரத்து 268, எள் ஐந்தாயிரத்து 648, கரும்பு 53 ஆயிரத்து 92, வாழை இரண்டு லட்சத்து 28 ஆயிரத்து 736 ரூபாயாகும். இதில், கடலை, உளுந்து, பயறு, எள்,

கரும்புக்கு மார்ச் 31க்குள்ளும், வாழைக்கு ஃபிப்ரவரி 28க்குள்ளும் பிரிமியத்தொகை செலுத்த வேண்டும். மொத்த பிரிமியத்தொகையில் கடன் வாங்கும் அனைத்து விவசாயிகளுக்கும் 50 சதவீத மானியமும், கடன் பெறாத விவசாயிகள், சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதவீத மானியமும், மற்றவர்களுக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படும். உத்தேச மகசூலைவிட கூடுதல் மகசூலுக்கு பிரிமியம் செலுத்த விரும்புவோர் கூடுதல் பிரிமியம் செலுத்தலாம்.தஞ்சை மாவட்டத்தில் கரும்பு, உளுந்து, பயறு சாகுபடி செய்யும் அனைத்து பிர்கா விவசாயிகளும், கடலை சாகுபடி சய்யும் ஒரத்தநாடு வட்டார விவசாயிகள், சில குறிப்பிட்ட பிர்கா விவசாயிகளும் இத்திட்டத்தில் பங்கேற்கலாம்.

மக்காச்சோளம், வாழை, எள் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யும் சில பிர்கா விவசாயிகள் வேளாண்மை கூட்டுறவு வங்கியில் அல்லது திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பழனியப்பனை நேரில் அல்லது 94437 80661 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம், என கலெக்டர் சண்முகம் கேட்டுக் கொண்டார்.

## நெல் கொள்முதலுக்காக 20% ஈரப்பதம் ஏ.ஐ.டி.யு.சி., மாநில நிர்வாகி வலியுறுத்தல்

தஞ்சாவூர்: ""நெல் கொள்முதலுக்கான ஈரப்பதத்தை உயர்த்த வேண்டும், என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தொழிலாளர் சங்கம் ஏ.ஐ.டி.யு.சி., மாநில பொதுச் செயலாளர் சந்திரகுமார் கேட்டுக் கொண்டார்.
இதுகுறித்து அவர் கூறியதாவது: சம்பா பருவ துவக்கத்தில் பயிரிடப்பட்ட நெல் அறுவடை துவங்கி நெல் விற்பனைக்கு வந்துவிட்டது. விவசாயிகள் அறுவடை செய்தவுடன் விற்பனை செய்ய வேண்டிய கட்டாயத்திலும், அதையே வழக்கமாக கொண்டுள்ளதாலும், அரசு நிர்ணயித்துள்ள ஈரப்பதத்துக்குள் வராததால் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்க இயலாமல் போகிறது. இதனால், தனியார் வியாபாரிகளிடம் கேட்கின்ற விலைக்கு விவசாயிகள் நெல்லை விற்கின்றனர். பொதுவாக பனி பெய்கின்ற காலங்களில் நெல்லின் தரம் நன்றாக இருந்தாலும், ஈரப்பதம் கூடுதலாக இருக்கும். பனி அதிகம் பெய்கின்ற ஃபிப்ரவரி மாதம் வரை 20 சதவீதம் வரை ஈரப்பதம் அனுமதித்தால்தான் அரசு கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நெல் விற்பனை செய்ய இயலும். அல்லது, தனியார் வியாபாரிகளைத்தான் தேடிச் சென்று விற்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படும்.

அரசு அறிவித்த குவிண்டாலுக்கு ஊக்கத்தொகை 50 ரூபாய் என்பது இன்னும் அமலுக்கு வரவில்லை. ஈரப்பதத்தை வாய்ப்பாக பயன்படுத்தி தனியார் வியாபாரிகள் முழு வீச்சில் கொள்முதலில் இறங்கியுள்ளனர். இதனால், அரசு கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் காலம் கடத்துவது பாதிப்பை ஏற்படுத்தும். கடந்தாண்டு சம்பா பருவம் முழுவதும் 20 சதவீத ஈரப்பதம் வரை அரசு நெல் கொள்முதல் செய்தது. தற்போது மழையும் பெய்து வருவதால் 17 சதவீத ஈரப்பதம் வரை உள்ள நெல்லை கொள்முதல் செய்வது என்பது பொருத்தமற்றதாகும். அரசு அறிவித்த 50 ரூபாய் ஊக்கத்தொகையை உடன் வழங்கி கொள்முதல் செய்யவும், ஈரப்பதத்தை 20 சதவீதம் வரை கொள்முதல் செய்ய அனுமதி வழங்க வேண்டும், என அவர் கேட்டுக் கொண்டார்.

## பயிர்க் காப்பீடு தொகையை வழங்கக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

கும்பகோணம்: பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு மத்திய அரசு 50 சதவீத தொகையை வழங்க கேட்டு குடந்தையில் விவசாயிகள் சங்கத்தினர் நெற்கதிர்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
தலைமை தபால் நிலையம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருப்பனந்தாள் ஒன்றிய செயலாளர் காசிநாதன் தலைமை வகித்தார். கும்பகோணம், திருவிடைமருதூர் ஒன்றிய செயலாளர்கள் ரவி, முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு மத்திய அரசு 50 சதவீத தொகையை வழங்க வேண்டும். மத்திய அரசு 25 சதவீத காப்பீட்டு தொகை அறிவித்துள்ளதை கண்டித்தும், மத்திய அரசின் விவசாய துரோக செயலுக்கு தமிழக அரசு துணை போகக்கூடாது என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது. மா.கம்யூ. கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப் பினர்கள் நடராஜன், சின் னை பாண்டியன், குடந்தை

ஒன்றிய செயலாளர் நாகராஜன், நகர செயலாளர் பார்த்தசாரதி உட்பட பலர் கோரிக்கைகளை பற்றி பேசினர். கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் வட்டாரங்களில் உள்ள விவசாயிகள் நெற்கதிர்களுடன் வந்து கலந்து கொண்டனர்.

## நெருக்கடியில் தேனி உழவர்சந்தை : விவசாயிகள்,பொதுமக்கள் அவதி

தேனி : நெருக்கடியில் தேனி உழவர்சந்தை செயல்படுவதால், விவசாயிகளும், பொதுமக்களும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

தேனி-பெரியகுளம் ரோட்டில் 1999 முதல் உழவர்சந்தை செயல்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் இருந்து 53 வகையான காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன. ஐம்பதுக்கும் மேற்பட்ட கடைகள் ஒதுக்கப்பட்டும், நெருக்கடியாக இருப்பதால் திறந்தவெளியில் விவசாயிகள் கடைகள் அமைத்துள்ளனர். தினமும் காலை 5 மணி முதலே சந்தை களை கட்டத்துவங்கி விடுகிறது. போதிய பஸ்வசதி இருப்பதாலும், நல்ல விற்பனை நடப்பதாலும் விவசாயிகள் நம்பிக்கையுடன் காய்கறிகளை கொண்டு வருகின்றனர். இதனால், 15 கி.மீ., சுற்றளவிலுள்ள நகரங்கள், கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கானோர் சந்தையில் காய்கறிகள் வாங்கிச்செல்கின்றனர்.

நெருக்கடியான இடத்தில் இருப்பதால், பொதுமக்கள் காய்கறிகளை வாங்குவதற்குள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். வியாபாரிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால், பெரும்பாலான நேரங்களில் பொதுமக்களுக்கு தரமான காய்கறிகள் கிடைப்பதில் "சிக்கல்' ஏற்பட்டு வருகிறது. வெளி மார்க்கெட்டுக்கு இணையாக, இங்கு காய்கறிகள் விலையும் இருப்பதால், பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.
பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்புள்ள இந்த சந்தையை விரிவுபடுத்த வேண்டும். கூடுதல் கடைகள் கட்டித்தருவதுடன், வியாபாரிகள் வருகையை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## விவசாயிகளுக்கு உதவி தொகை வழங்கல்

தேனி : பெரியகுளத்தில் விவசாய தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்கு கலெக்டர் முத்துவீரன் சமூக நல பாதுகாப்பு திட்டத்தில் உதவித்தொகை வழங்கினார். திருமண உதவித் தொகையாக 212 பேருக்கு ஒன்பது லட்சத்து 59 ஆயிரத்து 500 ரூபாய், இயற்கை மரணம் அடைந்த 99 பேர் குடும்பத்தினருக்கு 10 லட்சத்து 80 ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது. டி.ஆர்.ஓ., பிருந்தாதேவி, பெரியகுளம் கோட் டாட்சியர் சுப்பிரணி, முன்னாள் எம்.எல்.ஏ., மூக்கையா உட்பட பலர் பங்கேற்றனர்.

## புதியம்புத்தூர் அருகே பயறு வகை பயிர்களை தேசிய உணவு பாதுகாப்பு திட்ட அலுவலர் ஆய்வு

புதியம்புத்தூர்: புதியம்புத்தூர் அருகேயுள்ள நயினார்புரத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்ட ஆலோசகர் பயறுவகை பயிர்களை ஆய்வு செய்தார். ஓட்டப்பிடாரம் வட்டாரத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் பயறு வகை பயிர்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நயினார்புரம் கிராமத்தில் நடைபெற்று வருகிறது. பயறு வகை பள்ளியினை ஆலோசகர் கந்தப்பன் ஆய்வு செய்தார். அவர் விவசாயிகளிடம் பயறு வகை பயிர்களில் கடைபிடிக்க வேண்டிய சாகுபடி முறைகளை எடுத்துக் கூறினார். பயறு வயல்வெளி பள்ளியில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பூச்சி மருந்தினை தேவைப்பட்டால் மட்டுமே பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள், கோடையில் உழவு உழுவதால் பூச்சிகளின் முட்டைகள், கூட்டுப்புழுக்கள், களைகள் அழிக்கப்படுகிற விபரத்தையும் கற்றுத் தரப்படுகிறது. பூஞ்சாண மருந்துகள் கொண்டு விதை நேர்த்தி செய்வது பற்றியும், வயல் வரப்பினை சுற்றி ஆமணக்கு மற்றும் சோளப்பயிர்கள் பயிரிடுவதால் கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள் பற்றியும், நன்மை செய்யும்

பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் பற்றியும், இனக்கவர்ச்சி பொறி, விளக்குப்பொறி, மஞ்சள் அட்டை ஒட்டும்பொறி, உயிரியல் மருந்துகள் பற்றியும், தாவர பூச்சிகொல்லிகள் பற்றியும், எலிஒழிப்பு, அறுவடைக்குப்பின் நேர்த்தி பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. விவசாயிகளுக்கு பயறு, படி குறித்து நேரிடையாக பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும் விவசாயிகள் குழுக்களாக பிரிக்கப்பட்டு வயல் சூழல் ஆய்வு மேற்கொள்கின்றன. இக்கிராமத்தில் நடைபெறும் வயல்வெளி பள்ளியில் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, கூறப்படும் தொழில் நுட்பங்களை வயல்வெளியில் செயல்படுத்திட வேண்டுமென விவசாயிகளை திட்ட ஆலோசகர் கேட்டுக் கொண்டார். ஓட்டப்பிடாரம் வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்ராஜ் ஆய்வில் கலந்து கொண்டு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விதை உற்பத்தி, விதை விநியோகம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, வயல்வெளி பள்ளி, விவசாயிகள் சுற்றுலா, ஆகிய இனங்களுக்கு 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஆய்வின் போது வேளாண் உதவி அலுவலர்கள் நயினார், பகவதி  உடனிருந்தனர்.

## நெல் குவிண்டாலுக்கு ரூ.1,500 விலையாக வழங்கக் கோரிக்கை

திருச்சி: திருச்சி காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு தலைவர் நாகராஜன் வெளியிட்ட அறிக்கை: தமிழக சட்டசபை கூட்டத்தொடர் கவர்னர் உரையில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலன் கருதியும், நெல் உற்பத்தியை அதிகரிக்கவும், நெல் கொள்முதல் விலையுடன் ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு வழங்கும் நெல் ஆதரவு விலையான சன்ன ரகத்துக்கு ஆயிரத்து 50 ரூபாய், மோட்டா ரகத்துக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. தற்போது வழங்கப்படும் 50 ரூபாயும் சேர்த்து சன்ன ரகத்துக்கு ஆயிரத்து 100 ரூபாயும், மோட்ட ரகத்துக்கு ஆயிரத்து 50 ரூபாயும் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தமிழக அரசுக்கும், முதல்வருக்கும் காங்கிரஸ் விவசாயிகள் சார்பில் வரவேற்பும், பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறோம். கேரள மாநில அரசு வழங்குவது போல தமிழக அரசும் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ஆயிரத்து 200 ரூபாய் வழங்க வேண்டும். நெல் உற்பத்தி செலவு அதிகரிப்பு உர விலை உயர்வு, விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காதது, காலம் தவறிய பருவமழை, புவி வெப்பமடைதல் காரணமாக நெல் உற்பத்தி இந்தியா முழுவதும் கடுமையாக பாதிக்கப்பட்டது.இதனால், இந்தியாவில் உணவு பாதுகாப்பை கருத்தில்கொண்டு அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. இந்நிலையில், உள்ளூர் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், அரிசி உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ஆயிரத்து 500 ரூபாய் ஆதரவு விலையாக நிர்ணயம் செய்ய வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மானியம்

தென்காசி:"விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு மானியம் வழங்குகிறது', என வாசுதேவநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் கூறியுள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் தரமான விதை உற்பத்தி செய்திட விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. சுத்தி செய்தி சான்று அட்டை பொருந்திய விதைகளை வினியோகம் செய்யும் இடத்திற்கு கொண்டு செல்ல வாகனம், எடைபார்க்கும் இயந்திரம், ஈரப்பதமானி, சாக்கு தைக்கும் இயந்திரம் போன்றவைகளையும், சுத்திகரிப்பு இயந்திரங்களையும் உள்ளடக்கி விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 9 லட்சத்து 98 ஆயிரத்து 491 ரூபாய் செலவு ஆகிறது.

இதில் 50 சதவீத தொகை பாங்க் கடனும், திட்ட இறுதி மானியமாக 4 லட்சத்து 99 ஆயிரத்து 490 ரூபாய் காசோலையும் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் இந்த மானியம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிவகிரியை சேர்ந்த சுப்பிரமணியராஜாவிற்கு விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மானிய தொகைக்கான காசோலையை வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் வழங்கினார்.நிகழ்ச்சியில் மானாவாரி திட்ட உதவி செயற்பொறியாளர் மற்றும் வாசுதேவநல்லூர் வேளாண்மை

அலுவலர் ராமசாமி, துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லையா, பால்ராஜ், சம்சுதீன், அண்ணாத்துரை உடனிருந்தனர்.இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் கூறியுள்ளார்.

## கடப்போகத்தியில் இன்று கால்நடை பாதுகாப்பு முகாம்

தென்காசி:கடப்போகத்தியில் இன்று (12ம் தேதி) கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடக்கிறது.கீழப்பாவூர் யூனியன் கடப்போகத்தியில் தமிழக முதல்வரின் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் இன்று (12ம் தேதி) நடக்கிறது. முகாமிற்கு கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் ராமானுஜம் தலைமை வகிக்கிறார். யூனியன் சேர்மன் காமராஜ், குணராமநல்லூர் பஞ்.,தலைவர் கணபதிவிநாயகம் முன்னிலை வகிக்கின்றனர். கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் டாக்டர் சக்கையா வரவேற்கிறார்.தென்காசி எம்.எல்.ஏ.கருப்பசாமி பாண்டியன் முகாமினை துவக்கி வைத்து சிறந்து கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கி பேசுகிறார். மாவட்ட கவுன்சிலர் வைகுண்டராஜா, யூனியன் கவுன்சிலர் ஞானசேகர், பஞ்.,கவுன்சிலர்கள் மாரியப்பன், முத்துராணி, பஞ்.,உதவியாளர் முத்துக்குமார் வாழ்த்தி பேசுகின்றனர்.டாக்டர் பாஸ்கர் நன்றி கூறுகிறார்.

## சிறுமளஞ்சி வாழைக்காய் மார்க்கெட்டில் பொங்கல் விற்பனை ஜோர்

ஏர்வாடி:சிறுமளஞ்சி வாழைக்காய் மார்க்கெட்டில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாழைக்காய் விற்பனை ஜோராக நடந்தது வருகிறது.நான்குநேரி தாலுகா ராஜாக்கள்மங்களம் பஞ்.,சில் உள்ளது சிறுமளஞ்சி (எ) திருவேங்கடநாதபுரம். இங்கு நெல்லை மாவட்டத்திலேயே பிரசித்தி பெற்ற வாழைக்காய் மார்க்கெட் உள்ளது. வாரத்தில் திங்கள் மற்றும் வியாழக்கிழமை ஆகிய 2 நாட்கள் நடக்கும். இந்த மார்க்கெட்டிற்கு நெல்லை மாவட்டம் நான்குநேரி, ராதாபுரம் தாலுகா மற்றும் கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து ஏராளமான விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் விளையும் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.இங்கு வரும் வாழைத்தார்கள் ஏலம் விடப்படும். வாழைத்தார்களை கொள்முதல் செய்வதற்காக நெல்லை, கயத்தாறு, கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், சிவகாசி, ராஜாபாளையம், அம்பாசமுத்திரம் மற்றும் கேரளா மாநிலம் ஆலப்புலா, கொல்லம், திருவனந்தபுரம் போன்ற பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வருகின்றனர். பொங்கல் பண்டிகையையொட்டி நடந்த சிறப்பு சந்தையில் சிறுமளஞ்சி வாழைக்காய் மார்க்கெட்டிற்கு வழக்கத்தை விட அதிகளவில் வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தது. அதிக வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தாலும் விலையும் கூடுதலாக இருந்தது. நாட்டு வாழைத்தார் ஒன்று ரூ.150 முதல் ரூ.200 வரை விற்பனையானது. பொங்கல் நேரம் என்பதால் ஒரு தார் ரூ.200 முதல் ரூ.250 வரை விற்பனையாகிறது. அதே போல் கதலி, கோழிக்கோடு, தொழுவன், ரோபஸ்டா, செவ்வாழை, கற்பூரவல்லி போன்றவைகளும் வழக்கமான விலையை விட தார் ஒன்றுக்கு ரூ.30 முதல் ரூ.75 வரை கூடுதலாக விற்பனையானது. வழக்கமான விலையை விட அதிக விலைக்கு வாழைத்தார்கள் விற்பனை செய்யப்பட்டதால் விவசாயிகள் அதிக மகிழ்ச்சியடைந்தனர்.

## நெல்லையில் கரும்பு, மஞ்சள்குலை விற்பனை மும்முரம்:வரத்து அதிகரித்தால் காய்கறி விலை குறையும்

திருநெல்வேலி:தைப்பொங்கலையொட்டி நெல்லையில் கரும்பு, மஞ்சள் குலைகள், பனங்கிழங்குகள் விற்பனைக்கு தயாராக உள்ளன. சரக்குவரத்து அதிகரித்தால் காய்கறிகள் விலை குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.தைப்பொங்கல் பண்டிகை வரும் 14ம்தேதி கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகை நாளில் காய்கறிகள், கிழங்கு வகைகளை சூரியபகவானுக்கு படைத்து பொங்கலிட்டு மக்கள் வழிபடுவர். விவசாயத்தொழிலுக்கு உதவும் மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் 15ம்தேதி மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிராமங்களில் விளையாட்டுப்போட்டிகள், கலை நிகழ்ச்சிகளும் நடக்கும். பொங்கலுக்கு அடுத்த நாள் கரிநாளை மக்கள் வெளியூர்களுக்கு சென்று உற்சாகமாக

கொண்டாடுவர்.நெல்லை மாவட்டத்தில் பொங்கல் பண்டிகைக்கொண்டாட்டங்களுக்கு மக்கள் தயாராகி வருகின்றனர்.

பச்சரிசி, சர்க்கரை, காய்கறிகள், வாழைத்தார், மஞ்சள்குலை, கரும்பு, பனங்கிழங்கு உள்ளிட்ட பொருட்கள் விற்பனை களைகட்டியுள்ளது.பாளை. மார்க்கெட், டவுன் மார்க்கெட், டவுன் மேலரதவீதி, நெல்லை ஜங்ஷன் சூப்பர் மார்க்கெட்டில் கரும்பு கட்டுகள் விற்பனை மும்முரமாக நடக்கிறது. தேனி, மதுரை மேலூர், திருச்சி, தஞ்சாவூரில் கொள்முதல் செய்யப்பட்ட கரும்பு லோடு லாரிகள் நெல்லைக்கு வந்தவண்ணம் உள்ளது. நேற்று 15 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு 150 ரூபாய் முதல் 175 ரூபாய்க்கு விற்கப்பட்டது. 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு 100 ரூபாய் முதல் 110 ரூபாய் வரை விற்கப்பட்டது. வரத்து குறைந்தால் பொங்கல் பண்டிகை நெருங்கும் போது கரும்பு விலை மேலும் அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.சாயர்புரம், மணப்படை வீடு, அரியக்குளம், பேட்டை, அருகன்குளம், நெல்லை டவுன் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட மஞ்சள் குலைகள் நெல்லை டவுன், பாளை. மார்க்கெட்களில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மஞ்சள்குலை 10 ரூபாய் 15 ரூபாய் வரை விற்கப்படுகிறது.திசையன்விளை, குரும்பூர், மணப்படை வீடு, மணற்காடு செட்டிக்குளம் பகுதிகளில் இருந்து நெல்லை மார்க்கெட்களுக்கு பனங்கிழங்கு விற்பனைக்கு வந்துள்ளது. 25 எண்ணம் கொண்ட பனங்கிழங்குக்கட்டு 30 முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

காய்கறி விலை நிலவரம்:கடந்த சில வாரங்களாக நெல்லை மாவட்டம் முழுவதும் காய்கறிகள் விலை அதிகமாக இருந்தது. மாறுபட்ட சீதோஷ்ண நிலை, உற்பத்திக்குறைவு இதற்குக்காரணம் என கூறப்பட்டது. நேற்று கத்திரிக்காய் ஒரு கிலோ 40 ரூபாய், தக்காளி 25, கேரட் 25, பீன்ஸ் 20, பீட்ரூட் 20, முட்டைக்கோஸ் 12, பல்லாரி 22 முதல் 30, சிறிய வெங்காயம் 20 முதல் 30, மிளகாய் 15, பிடிகிழங்கு 50, கருணைக்கிழங்கு 20, சிறுகிழங்கு 25, சேம்பு 25, சேனை 20, உருளைக்கிழங்கு 24, வள்ளிக்கிழங்கு 40, அவரைக்காய் 25, சவ்சவ் 15, வெண்டை 15, சீனிஅவரைக்காய் 15, புடலை 20, பூசனி 8, தடியங்காய் 8, காலிபிளவர் 25, பட்டர்பீன்ஸ் 80, பச்சைப்பட்டாணி 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வரத்து மிகக்குறைவாக இருப்பதால் மாங்காய் கிலோ 80 ரூபாய், முருங்கைக்காய் கிலோ 140 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

காய்கறிகள் விலைகுறைய வாய்ப்பு:காய்கறி வியாபாரிகள் கூறும் போது, ""பெங்களூரு, மேட்டுப்பாளையம், ஓசூர், தஞ்சாவூர், ஒட்டன்சத்திரம், நெல்லை சுற்றுப்பகுதிகளில் விளையும் காய்கறிகள் நெல்லையில் விற்கப்படுகிறது. பொங்கலையொட்டி காய்கறிவரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. சரக்குவரத்து அதிகரித்தால் காய்கறிகள் விலை குறையும்'' என்றனர்.

## நோய் தாக்கி பயிர்கள் நாசம் : கலெக்டரிடம் விவசாயிகள் மனு

திருவள்ளூர் : மானாவாரி சாகுபடிக்கு காத்திருந்த 150 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் குலநோய் தாக்கி கருகி சேதமடைந்து விட்டது என விவசாயிகள், திருவள்ளூர் மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்தனர்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப் பூண்டி தாலுகா முக்கரம்பாக்கத்தை அடுத்து சேர்பேடு கிராமம் உள்ளது. இங்கு 150 ஏக்கரில் பி.பி.டி. ரக நெல் பயிரிடப்பட்டது. இந்நிலையில், அடுத்த மாதம் சாகுபடிக்கு தயாராக இருந்த நெற்கதிர்கள் அனைத்தும் குலநோய் தாக்கி கருகி விட்டது. இதுகுறித்து, சேர்பேடு மற்றும் சந்திராபுரம் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் சீனிவாசன், ஜெயகோட்டி, தனலட்சுமி, முருகேசன் உட்பட திரளானோர் நேற்று திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பழனிக்குமாரை சந்தித்து மனு அளித்தனர். அம்மனுவில், "எங்கள் கிராமத்தின் அருகே எருக்குவாய் ஊராட்சி சேர்பேடு கிராமத்தில் எங்களுக்குச் சொந்தமான நிலங்களிலும், குத்தகை நிலங்களிலும் பி.பி.டி., ரக நெல்லை ஒரு போக பயிராக விவசாயம் செய்திருந்தோம். ஒரு முறை தான் பூச்சிக் கொல்லி மருந்து தெளித்து பயிர் செய்து அறுவடை செய்து வந்தோம். ஆனால், தற்போது செய்துள்ள பயிருக்கு ஐந்து முறை பூச்சிக் கொல்லி மருந்து தெளித்தோம். இருந்தும் குல நோய் தாக்கி நெற் பயிர்கள் கருகிவிட்டன.

மேலும், பாதி நிலங்களில் நெற்கதிர் வராமலேயே அழிந்துவிட்டது. இதனால், ஒருபோக விவசாயத்தை நம்பி வாழ்ந்து வரும் நாங்கள் கையில் வைத்திருந்த நகைகள், சாமான்கள், தாலி உட்பட பலவற்றை அடமானம் வைத்து பயிர் செய்து வந்த நிலையில், நெற்பயிர் கருகி எங்களுக்கு பெருத்த சேதத்தை உருவாக்கி விட்டது. எனவே, கலெக்டர் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி, எங்களுக்கு நிவாரணம் வழங்க கோருகிறோம்' என குறிப்பிடப் பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு இடுபொருட்கள்: 50 சதவீத மானியத்தில் வழங்கல்

வாலாஜாபேட்டை:வாலாஜாபேட்டை அடுத்த சுமைதாங்கியில் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது.வேலூர் வேளாண்மை துறை அலுவலகம் சார்பில், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் களர் உவர்நிலங்களை சீரமைப்பதற்காக, ஒன்றியத்தில் உள்ள களர் உவர் நிலங்கள் உள்ள கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. அந்தவகையில், வாலாஜா அடுத்த சுமைதாங்கி பஞ்.,ல் உள்ள 200 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் இடுபொருட்கள் வழங்க தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விழா பஞ்., தலைவர் ஏழுமலை தலைமையில் நடந்தது. ஒன்றிய கவுன்சிலர் ஜெயந்தி முன்னிலை வகித்தார்.வேளாண்மை உதவி இயக்குனர் தமிழ்செல்வன் வரவேற்று, 15 விவசாயிகளுக்கு 40 டன் ஜிப்சம் மற்றும் 400 கிலோ ஜிங்க் சல்பேட் வழங்கினார். மேலும், 185 விவசாயிகளுக்கு இடுபொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் 40 ஏக்கர் நிலம் சீர்திருத்தம் செய்யப்படும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.வேளாண் அலுவலர் சண்முகம், உதவியாளர்கள் ராஜன், சாரதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.இதேபோல், பாகவெளி, கடப்பேரி ஆகிய கிராம விவசாயிகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் இடுபொருட்கள் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண்மை துறையினர் தெரிவித்தனர்.

## கள்ளக்குறிச்சி பருத்தி வாரச் சந்தையில் சராசரியாக ரூ.26 லட்சம் 'பஞ்சு' விற்பனை

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்க பருத்தி சந்தை துவங்கிய மூன்று வாரத் தில் 79 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு விற்பனையானது. கள்ளக்குறிச்சி பகுதியில் அதிகளவில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய் துள் ளனர். தற்போது பருத்தி அறுவடை நடந்து வருகிறது. அதனையொட்டி கள் ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற் பனை கூட்டுறவு சங்கத் தின் மூலம் பருத்தி சந்தை கடந்த மாதம் 16ம் தேதி துவங்கியது. புதன் கிழமை தோறும் நடக்கும் இச்சந்தை வரும் ஜூன் மாதம் வரை செயல்படும். விவசாயிகள் கொண்டு வரும் பருத்திக்கு விலை திருப்திகரமாக இல்லாத பட்சத்தில் பருத்தியை குடோனில் ஸ்டாக் வைப் பதற்கு வசதி உள்ளது. பின்னர் கூடுதல் விலை கிடைக்கும் போது பஞ்சு மூட்டைகளை விற்பனை செய்து கொள்ளலாம். இதனால் ஆயிரக்கணக்கான பஞ்சு மூட்டைகள் விற்பனைக்கு குவிகின்றது.
கடந்தாண்டு பஞ்சு விற் பனையில் ஏற்றத்தாழ்வு இருந்ததால் விவாயிகள் கள்ளக்குறிச்சியில் திடீர் சாலை மறியல் போராட் டம் நடத்தினர். அதுபோன்ற நிலை இவ்வாண்டு ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வாரந்தோறும் பஞ்சு மூட்டைகள் கொண்டு வரும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது. இவ்வாண்டின் விற்பனை இலக்காக
4 கோடியே 7 லட்சம் ரூபாய் நிர்ணயிக் கப்பட் டுள்ளது. இதுவரை கடந்த மூன்று வாரங்களில் மட் டும் 79 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு விற்பனை யாகி உள்ளது.
ஒரு குவிண்டால் பருத்தி அதிகபட்சம் 3,569 ரூபாய்க் கும், குறைந்த பட்சம் 3,005க்கும் விற்ப னையா னது. 3 வாரத்தில் 1,670 விவ சாயிகள் 7,677 பஞ்சு மூட் டைகளை விற் பனைக்கு கொண்டு வந்தனர்.

## கோலியனூர் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம் அறிமுகம்

விழுப்புரம் : கோலியனூர் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை காப்பீட்டு திட் டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து கோலியனூர் வட்டார தோட்டக் கலை அலுவலர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:
நடப்பு 2009 -2010ம் ஆண்டு ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் மரவள்ளி மற்றும் வாழை பயிர் களுக்கு தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ளலாம்.
இதில் விழுப்புரம் குறு வட்டத்தில் வாழை சாகுபடி செய் துள்ள விவசாயிகளும், வளவனூர் குறு வட்டத்தில் மரவள்ளி மற்றும் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகளும் தங்கள் பயிர்களுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம். புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் போதும் விவசாயிகளுக்கு காப்பீடு மற்றும் நிதியுதவி வழங்குவதே இந்த திட்டத்தின் நோக்கம். பயிர்களை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும், குத்தகைக்கு பயிரிடுவோரும் இந்த திட்டத்தில் பயன் பெறலாம். விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில் கூடுதலாக காப்பீட்டுத் தொகை செலுத்தி சராசரி மகசூலின் 150 சதவீத மதிப்பு வரை காப்பீடு செய்து கொள்ளலாம். பயிர்க் கடன் பெற்ற சிறு, குறு மற்றும் இதர விவ சாயிகளுக்கு காப்பீட்டு கட்டணத்தில் 50 சதவீதம் மற்றும் பயிர்க்கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதவீதம், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும்.
காப்பீட்டு கட்டணத்தை பயிர்க் கடன் பெறும் வங்கியிலேயே விவசா யிகள் செலுத்தலாம்.

## திடீர் மழை காரணமாக நெல் அறுவடை பணி பாதிப்பு

விழுப்புரம் : மாவட்டத்தில் பெய்த திடீர் மழையால் சம்பா போக நெல் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் பாதித்துள்ளனர். வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக விழுப்புரம் மாவட்டத் தில் கடந்த சில தினங் க ளாக பரவலாக மழை பெய்தது. நேற்று முன்தினம் காலை 8 மணி வரை செஞ்சியில் 12 மி.மீ., மழையும், உளுந்தூர்பேட் டையில் 10 மி.மீ., வானூரில் 5 மி.மீ., சங்கராபுரத்தில் 3 மி,மீ., விழுப்புரத்தில் ஒரு மி.மீ., அள வும் மழை பெய்துள்ளது.தற்போது மாவட்டம் முழுவதும் கிணற்று பாசனத்தை பயன்படுத்தி சம்பா போகம் சாகுபடி செய்யப்பட்டுள்ள வெள்ளை பொன்னி நெல் ரகம் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

இந்நிலையில் திடீர் மழையின் காரணமாக வயலில் நன்கு விளைந் துள்ள நெல் மணிகள் முளை விடத் துவங்கியுள் ளது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதித் துள்ளனர்.முன்னதாக கடந்த 8 மற் றும் 9ம் தேதிகளில் மாவட் டத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக கலெக் டர் பழனிசாமி விவ சாயிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். இருந்தாலும் அறுவடையை தள்ளி வைக்க முடியவில்லை.

### பொங்கலுக்காக வந்திறங்குகின்றன 45 லோடு கரும்பு

திருப்பூர்: தை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஆம்பூர், தேனி பகுதிகளில் இருந்து திருப்பூருக்கு கரும்பு வரத்து துவங்கியுள்ளது. கடந்த ஆண்டு விற்பனையை கணக்கிட்டு, இரண்டு நாள் விற்பனைக்காக 45 லோடு கரும்பு கொண்டு வரப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.
தை பொங்கல் என்றாலே பீளைப்பூ, ஆவாரம்பூ, செங்கரும்பு ஞாபகத்துக்கு வரும். பண்டிகைக்கு மூன்று, நான்கு நாட்களுக்கு முன்பிருந்தே, திருப்பூர் நகரப்பகுதியில் விற்பனைக்கு கரும்பு குவிக் கப்படுகிறது. ஆம்பூர், தேனி, தேவதானம்பட்டி, சேலம், ஆத்தூர், மதுரை என, பல்வேறு பகுதிகளில், தை பொங்கல் விற்பனைக்காகவே, செங்கரும்பு சாகுபடி செய்யப் படுகிறது.

திருப்பூர் பகுதியில் உள்ள மொத்த வியாபாரிகள், தோட்டங்களுக்கே நேரில் சென்று மொத்தமாக விலை பேசி வாங்கி வருகின்றனர். இங்குள்ள சிறு வியாபாரிகளுக்கு ஐந்து சதவீத லாபத்திற்கு விற்கின்றனர். திருப்பூரில் பருவ நிலை மாற்றத்துக்கு ஏற்ப, கொய்யா, மா, பலா, தர்பூசணி என, சில்லறை வியாபாரத்தில் 100க்கும் அதிகமானோர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள், தற்போது கரும்பு விற்பனையில் இறங்கியுள்ளனர்.

கரும்பு வெட்டுவதற்கு முன்னதாகவே, சாகுபடி செய்யப்பட்ட இடத்துக்குச் சென்று, 15 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு 130 மற்றும் 140 ரூபாய்க்கு கொள்முதல் செய்துள்ளனர். உயரம் அதிகமான கரும்பு கட்டு 150 ரூபாய் வரை கூட கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. திருப்பூருக்கு கொண்டு வர ஏற்படும் போக்குவரத்து செலவுகளாக, ஒரு லோடுக் காக 4,600 ரூபாய் வாடகை; ஆள் கூலி என, கட்டுக்கு ஐந்து ரூபாய் வரை செலவு அதிகமாகிறது. இருப்பினும், 15 அல்லது 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு, 200 ரூபாய்க்கு விற்கப் படுகிறது.
அரசு மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு அருகே, பழைய பஸ் ஸ்டாண்ட் எதிரே, மார்க்கெட் பகுதி, புஸ்பா தியேட்டர் பஸ் ஸ்டாப் பகுதி, மங்கலம் ரோடு என, குறிப்பிட்ட சில பகுதிகளில் ஆண்டுதோறும் கரும்புகள் விற்கப்படும். பண்டிகை சமயத்தில், ஆம்பூர், நத்தம், தேனி, மதுரை, திருநெல்வேலி, கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் சில்லறை வியாபாரிகளும் கரும்பு விற்பனையில் ஈடுபடுகின்றனர். ஒரு ஜோடி கரும்பு, 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. பல்வேறு பகுதிகளில் இருந்து 45 லோடு கரும்புக்கு "ஆர்டர்' கொடுக்கப்பட்டுள்ளது.

கரும்பு வியாபாரிகள் கூறுகையில், "வழக்கமாக அனைத்து பண்டிகைகளையும் கோலாகலமாக கொண் டாடும் திருப்பூர் நகரவாசிகளுக்காக, தோகை மங்காத கரும்புகள் திருப்பூருக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மொத்த கரும்புகளையும் இரண்டு நாட்களில் விற்பனை செய்ய வேண்டும். கடந்த 17 நாட்களாக நடந்த சாய ஆலைகள் வேலை நிறுத்தத்தால், கரும்பு விற்பனை பாதிக்குமோ என்ற அச்சத்தோடு தான், விற்பனையை துவக்கியுள்ளோம்' என்றனர்.

## வயல்வெளி பருத்தி பயிற்சி பள்ளியில் தொழில் நுட்பம் தெரிந்து கொள்ளலாம்

உடுமலை : "வயல்வெளி பயிற்சி பள்ளிகளில் பங்கேற்று சாகுபடி தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்வதால் பருத்தியில் நல்ல விளைச்சல் எடுக்கலாம்', என வேளாண் துறை உதவி இயக்குநர் காளிமுத்து சீமா பருத்தி சாகுபடி பயிற்சி துவக்க விழாவில் பேசினார்.உடுமலை அருகேயுள்ள கொழுமம் மற்றும் காவலப்பட்டியில் சீமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி கழகத்தின் பருத்தி வயல்வெளி பள்ளி பயிற்சி துவக்க விழா நடந்தது.வேளாண்துறை உதவி இயக்குனர் காளிமுத்து பேசியதாவது:பருத்தி சாகுபடியை அதிகரிக்க வேளாண்துறை மற்றும் சீமா இணைந்து விவசாயிகளுக்கான வயல்வெளி பள்ளி பயிற்சிகளை நடத்துகிறது.

விவசாயிகள் இதில், பங்கேற்பதால் பயிர் சூழலை உற்று நோக்கி, தேவையான தொழில் நுட்பங்களை செயல்படுத்தும் திறமையை பெறுகின்றனர். சாகுபடியில் இயற்கை சூழலின் முக்கியத்துவம் மற்றும் அதில் உள்ள உயிரினங்களுக்கு உள்ள பிணைப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதை விவசாயிகள் வயல்வெளிகளில் பயன்படுத்தி தை பட்டத்தில் அதிக மகசூல் எடுக்கலாம் என்றார்.அரசு விதை சான்று துறை அதிகாரி ராமலிங்கம் விதை உற்பத்தி நடைமுறைகள், பயிர் இடைவெளி பராமரிப்பு குறித்து பேசினார். சீமா நிறுவன பொறுப்பு அலுவலர் ராமலிங்கம் மண்ணில் எஞ்சியுள்ள உரம் குறித்து மண் பரிசோதனையில் அறியலாம். பயிரின் உற்பத்தி திறனுக்கு ஏற்ப உரமிடுவதால் வீண் செலவு தவிர்க்கப்பட்டு மகசூல் அதிகமாக பெற முடியும் என பேசினார்.கள அலுவலர் ஆரோக்கியசாமி: கோடை உழவு செய்வதால் கூட்டுப் புழு முட்டை குவியல்கள் மண்ணிலிருந்து வெளிக் கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகிறது. களை செடிகளும் அழிக்கப்படுவதுடன், மண்ணில் காற்றோட்டம் அதிகரித்து நுண்ணுயிர்கள் பெருக்கமடைகின்றன. கோடை உழவால் மண் நீர் பிடிப்பு அதிகரிக்கப்பட்டு, வறட்சி காலத்தில் தந்துாகி முறையில் பயிர் நீரை எடுத்து வளர உதவியாக இருக்கும் என்றார்.

## மாதுளம்பழம் சாப்பிட்டால் மார்பக புற்றுநோய் வராது

பதிவு செய்த நாள் 1/12/2010 12:45:39 AM



வாஷிங்டன் : மாதுளம்பழம் சாப்பிடுபவர்களுக்கு மார்பக புற்று நோய் வருவதற்கான வாய்ப்பு குறைவு என ஆய்வில் தெரியவந்துள்ளது. அமெரிக்க புற்றுநோய் ஆராய்ச்சியாளர் சங்கத்தின் Ôகேன்சர் பிரிவென்சன் ரிசர்ச்Õ பத்திரிகையில் இந்த தகவல் வெளியாகி உள்ளது.
அண்மைக் காலமாக, மார்பக புற்று நோயால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆஸ்ட்ரோஜென் எனப்படும் ஹார்மோன் காரணமாகவே 4ல் 3 பெண்களுக்கு புற்று நோய் ஏற்படலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஹார்மோன் காரணமாக ஏற்படும் புற்று நோயிலிருந்து தப்பிக்க மாதுளம்பழம் சாப்பிடலாம் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மாதுளம்பழத்தில் இயற்கையாகவே பைட்டோகெமிக்கல் உள்ளது ஆய்வில் தெரியவந்துள்ளது. எல்லஜிக் அமிலம் என்று அழைக்கப்படும் இது, புற்றுநோய் செல்கள் வளர்வதைக் கட்டுப்படுத்த உதவுகிறது.
மாதுளம் பழத்தில் உள்ள பைட்டோகெமிக்கல் ஆஸ்ட்ரோஜென் எனப்படும் ஹார்மோனை கட்டுப்படுத்துகிறது. இதனால் மார்பக புற்றுநோய்க்கு காரணமான செல்கள் மற்றும் கட்டி வளர்வது தடுக்கப்படுகிறதுÕÕ என கலிபோர்னியாவின் டாரேட்டில் உள்ள சிட்டி ஆப் ஹோப் மார்பக புற்றுநோய் ஆராய்ச்சி திட்டத்தின் இணை தலைவர் ஷியுவான் சென் தெரிவித்துள்ளார்.

மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு மாதுளம்பழம் கொடுத்து ஆய்வு செய்யப்பட்டது. புற்றுநோயை கட்டுப்படுத்துவதற்கான அமிலம் இருப்பது தெரியவந்துள்ளது. மாதுளையில் மருத்துவ குணங்கள் அதிகம். எனினும், இது ஆய்வக முடிவுதான். நிஜமாக இது சாத்தியமா என்பதை உறுதியாக கூற இயலாதுÕÕ என ஓஹியோ ஸ்டேட் யுனிவர்சிட்டியின் இன்டர்னல் மெடிசின் துறை பேராசிரியர் கேரி ஸ்டோனர் கூறினார்.

## பொங்கல் விற்பனை களை கட்டியது வாழைத்தார்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

பதிவு செய்த நாள் 1/12/2010 1:23:09 AM

தூத்துக்குடி : தூத்துக்குடியில் பொங்கல் பொருட்கள் விற்பனை களை கட்ட துவங்கியுள்ளது. மேலும் பொங்கலை முன்னிட்டு வெளிநாடு களுக்கு வாழைத்தார்கள் கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை வரும் 14ம் தேதி கொண்டாடப்படு கிறது. இதனை முன்னிட்டு தூத்துக்குடி மார்க்கெட் களில் மதுரை, தேனி, நெல்லை, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து லாரிகள் மூலம் கரும்புகள் வந்து குவிந்துள் ளன.

இவை ரகம் வாரியாக பிரித்து விற்பனைக்கு வைக் கப்பட்டுள்ளன. மாவட் டத்தின் பல பகுதிகளை சேர்ந்த சில்லரை வியாபாரி களும் இவற்றை வாங்கி செல்கின்றனர்.

பொங்கல் பண்டிகையை அலங்கரிப்பதில் கரும்புக்கு அடுத்து முக்கிய இடம் பெற் றுள்ள மஞ்சள் குலைகள் விற்பனையும் சூடு பிடிக்க துவங்கியுள்ளது. மஞ்சள் நீர்காயல், ஆத்தூர், சாயர்புரம், ஏரல் பகுதிகளில் இருந்தும் கரூர், ஈரோடு உள்ளிட்ட வெளி மாவட் டங்களில் இருந்தும் தூத்துக்குடி மார்க்கெட்டுக்கு மஞ்சள் குலைகள் விற் பனைக்கு கொண்டு வரப் பட்டுள்ளன. இவை தரத் திற்கேற்ப ரூ.10 முதல் ரூ.20 வரை விற்கப்படுகின்றன. வழக்கமாக தூத்துக்குடி மாவட்டத்தில் வாழைத்தார் கள், வாழைப்பழங்கள் விற்பனை பரபரப்பாக நடப் பது வழக்கம். இந்நிலையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் படி வழங்குவதற்காகவும், பிற உபயோகங்களுக்காகவும் வாழைத்தார்கள் விற்பனை அதிகரிக்கும் என்பதால் வழக்கத்தை விடவும் அதிக மாக வாழைத்தார்கள் மார்க்கெட்டுகளில் குவிந் துள்ளன. தமிழகத்தில் சென்னை, திருப்பூர், உடுமலைபேட்டை, விழுப்புரம், பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட பகுதி களுக்கு இங்கிருந்து வாழைத் தார்கள் லாரிகளில் அனுப்பப்படுகின்றன.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழர்கள் அதிகம் வசிக்கும் மாலத்தீவு, அந்தமான் நிகோபார் தீவுகள், சிலோன் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடு களுக்கும் வாழைத்தார்கள் அதிக அளவில் கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்படு கின்றன. குறிப்பாக கதலி ரக வாழை தார்கள் இந்த நாடு களுக்கு அதிகம் அனுப்பப் படுகின்றன. இதனால் கதலி தார்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு வார காலத்தில் இவற்றின் விலை இரு மடங்கு விலை உயர்ந்துள்ளது.

பனங்கிழங்குகளை பொறுத்தவரை கொற்கை யில் இருந்து வரும் கிழங்கு களுக்கு தனி விலை உள்ளது. மேலும் திருச்செந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பனங்கிழங்குகள் வந்தாலும், விரைவில் விற்பனையாகி விடுவதால் ராமநாதபுரம், கீழக்கரை, பார்த்திபனூர், சிவகங்கை ஆகிய பகுதிகளில் இருந்தும் பனங்கிழங்குகள் வரவழைக் கப்பட்டுள்ளன.

இது தவிர பொங்கலிட தேவையான பனை ஓலைகள், காய்கனிகள், அடுப்பு கட்டிகள் உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விற்பனையும் களை கட்டியுள்ளது. பொங்கலிட தேவையான பொருட்களை முன்கூட்டியே வாங்க மக்கள் ஆர்வம் காட்டுவதால் பஜார், மார்க்கெட், பஸ் நிலைய பகுதிகள் நெருக்கடி மிகுந்து காணப்படுகிறது.

### சாத்தனூர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது குறித்து ஆலோசனை கூட்டம்

பதிவு செய்த நாள் 1/12/2010 1:32:21 AM

திருவண்ணாமலை : சாத்தனூர் அணை முழுமையாக நிரம்பாததால் தி.மலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். எனவே, தற்போதுள்ள தண்ணீரை பாசனத்துக்கு திறப்பது குறித்து நாளை அவசர ஆலோசனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயம் சாத்தனூர் அணையையே பெரிதும் நம்பியிருக்கிறது. சாத்தனூர் அணை நிரம்பினால்தான், திருவண்ணாமலை மாவட்டத்தில் 19,463 ஏக்கர், விழுப்புரம் மாவட்டத்தில் 30,537 ஏக்கர் சாகுபடி நடைபெறும். மேலும், தி.மலை மாவட்டத்தில் 34 ஏரிகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 72 ஏரிகளும் சாத்தனூர் அணையின் உபரி நீரையே நம்பியிருக்கிறது.

கடந்த 2008ம் ஆண்டு டிசம்பர் மாதம் அணை முழுமையாக நிரம்பியது. எனவே, கடந்த 2009 ஜனவரி 13ம் தேதி இடதுபுற கால்வாய் வழியாக வினாடிக்கு 185 கனஅடி வீதமும், வலதுபுற கால்வாய் வழியாக வினாடிக்கு 125 கனஅடி வீதமும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தொடர்ந்து 90 நாட்கள் சுழற்சி முறையில் தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆனால், இந்த ஆண்டு இன்னும் சாத்தனூர் அணை முழுமையாக நிரம்பவில்லை. அணையின் மொத்த உயரம் 119 அடி. மொத்த நீர் கொள்ளவு 7,321 மில்லியன் கனஅடி. ஆனால், நேற்று மாலை நிலவரப்படி, 107 அடி மட்டுமே தண்ணீர் நிரம்பியுள்ளது. அணையில் 4,901 மில்லியன் கனஅடி தண்ணீர் தற்போது உள்ளது. அணைக்கு நீர்வரத்தும் இல்லை.

எனவே, சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள், இந்தமுறை முழுமையாக பாசன வசதி கிடைக்குமா என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர். மேலும், குறைந்த அளவே தண்ணீர் இருப்பதால், அடுத்த போகம் சாகுபடி செய்ய வாய்ப்பு இருக்காது என கருதுகின்றனர்.

இந்நிலையில், தற்போதுள்ள தண்ணீரை பாசனத்துக்கு திறப்பது குறித்து விவசாய சங்க பிரதிநிதிகளுடனான அவசர ஆலோசனைக் கூட்டம், நாளை (புதன்கிழமை) மதியம் 12.30 மணி அளவில் திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் தி.மலை மற்றும் விழுப்புரம் மாவட்ட எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ., க்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பாசன சங்க உறுப்பினர்கள், திட்டக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.
தற்போதுள்ள குறைந்த அளவு நீரை, இடது மற்றும் வலதுபுற கால்வாய்கள் வழியாக எத்தனை நாட்களுக்கு, எத்தனை கனஅடி வீதம் திறப்பது என்பது குறித்து நாளை நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.
அதன்பிறகு, பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும் நாள் குறித்த அறிவிப்பை அரசு வெளியிடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### நெல்லை சந்தைகளில் களைகட்டியது பொங்கல் விற்பனை

பதிவு செய்த நாள் 1/12/2010 1:24:52 AM

நெல்லை : நெல்லை, தூத்துக்குடி சந்தைகளில் பொங்கல் விற்பனை களைகட்டியது. காய்கறிகளோடு கரும்பு கட்டுகளும் மஞ்சள் குலைகளும் குவிந்துள்ளன.

தமிழர் திருநாளான பொங்கலை தென்மாவட்டத்தினர் சிறப்பாக கொண்டாடுவது வழக்கம். குறிப் பாக நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பொங்கலிடுவார்கள்.
பருவம் தப்பி பெய்தாலும் பயிர் செழிக்க பெய்த மழை யால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். எனவே, பொங்கல் கொண்டாட்டம் குதூகலமாக உள் ளது. பொருட்கள் வாங்க மக்கள் கூட்டம் மார்க்கெட் பகுதிகளில் அலை மோதுகிறது.

பாத்திரக்கடைகளில் பித்தளை பொங்கல் பானைகள், குத்துவிளக்குகள், அண்டா, குடம் போன்றவை மதுரை, கடலூர், திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து விற்பனைக்காக குவிந்துள்ளன.

நெல்லைக்கு தேனி, மேலூர் பகுதிகளில் இருந்து கரும்பும், திருவண்ணாமலையிலிருந்து கருணையும் சேம்பும், பொள்ளாச்சி உடுமலை பகுதியில் இருந்து மஞ்சள், காய்கறிகளும் வந்திறங்கிவிட்டன. இது போக உள்ளூர் சரக்குகளாக பொட்டல் பகுதி மஞ்சளும், சிவந்திப்பட்டி, கூனியூர் பானைகளும், கலியாவூர் பனை ஓலைகளும், அந்தாலக்குறிச்சி பனங்கிழங்குகளும் சந்தையை நான்கு நாட்களுக்கு முன்பே மொய்த்துவிட்டன. மேலும், பாவூர்சத்திரம் வெங்காயம், சுரண்டை மிளகாய், கயத்தார் கத்தரி, தக்காளி, கடம்பூர் சேனை என காய்கறிகளும் அக்கம்பக்கத்தில் இருந்து தினமும் பொலிவு குன்றாமல் இறங்குகின்றன. ஸ்ரீவைகுண்டம், சிவத்தையாபுரம், ஆத்தூர், கருங்குளம் ஆகிய ஊர்களில் இருந்து வாழை இலைகள், குலைகள் ஏற்றிய லாரிகள் நெல்லையில் முகாமிட்டுள்ளன.

மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்திலிருந்து சிறு கிழங்கும், மானூர், சங்கரன்கோவில், கோவில்பட்டி பகுதிகளிலிருந்து சாமந்தியும் குன்றென குவிந்துள்ளன. நெல்லை டவுன், பாளை, மேலப்பாளையம், தச்சநல்லூர், தாழையூத்து சந்தைகளில் போதிய சரக்குகள் வந்திறங்கி விட்டன. நேற்று காலை கரும்புகட்டுகள் ஒன்றுக்கு 130 ரூபாய் வரை விற்கப்பட்டாலும் இறக்கப்பட்ட வேகத்தில் சில இடங்களில் விற்று தீர்ந்துவிட்டன. சுற்றுவட்டார கிராமத்து மக்களும் பொங்கல் கொள்முதலை தொடங்கிவிட்டனர்